# வடக்கின் முதல் ஆப்பிள் பருத்தித்துறையில்

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 15 ஷஃபான்: 24 இதழ்: 1[illegible]
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-7-7

இன்று தொடக்கம்
விசேடமாக
**விற்பனையாகின்றன**
இறக்குமதி செய்யப்பட்ட
வெளிநாட்டு வர்ணம் திட்டப்பட்ட
ஃ நைலெக்ஸ் சேலைகள்
ரூபா 89/50 சதம்
ஃ வர்ணம்திட்டப்பட்ட சித்தை
ரூபா 7/25 சதம்
ஃ வெள்ளைப் பப்ளின்
ரூபா 7/50 சதம்
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
**க. நாகமுத்து அன் சன்**
48-50, பெரிய கடை,
யாழ்ப்பாணம். 9923

## பழுத்தது!!

(ஆவரங்கால்)

வடபகுதியில் முதற் தடவையாக அப்பிள் செய்கை பண்ணப்பட்டிருக்கிறது. பருத்தித்துறையில்தான் முதலாவது அப்பிள் பழம் உற்பத்தியாயிருக்கிறது. அது பழுத்துமிருக்கிறது.

இத் தவலை பருத்தித்துறைத் தொகுதி எம். பி. திரு. கே. துரைரத்தினமே நேற்று முன்தினம் ஆவரங்காலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் ஓர் அங்கமாக இடம்பெற்ற தொழிலா

(8- பக்கம் பார்க்க)

# தமிழ்ஈழம் அமையுமுன் 'தமிழ் மண்' காக்கக்கூட்டணி அழைப்பு

## செப்டம்பர் மாதம் தீண்டாமை ஒழிப்பு

### அரசியலமைப்பு விவாதத்தில் கலந்து கொள்வதில்லை

### ஆவரங்கால் மாநாட்டின் தீர்மானங்கள்!

(ஆவரங்கால்)

தமிழ் ஈழம் அமைப்பதற்கு முதற்படியாக, தமிழ்ப் பகுதிகளில் குடியேறித் தமிழ் மண்ணைக் காப்பாற்றவேண்டுமென்றும், இதற்காக இலங்கையிலும், வெளிநாடுகளிலுமுள்ள தமிழர்கள், தமது வருமானத்தில், ஒரு சதவிதத்தைக் கொடுத்து உதவவேண்டுமென்றும், அகதிகளைக் குடியமர்த்துவதில் உதவுவதற்காக, ஆயிரக்கணக்கில் இளைஞர்களும், யுவதிகளும் அணிதிரள வேண்டுமென்றும் கோரும் அரசியல் தீர்மானம், நேற்று, நடந்துமுடிந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2வது தேசிய மாநாட்டில், மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மூவர் மட்டும் எதிர்த்து வாக்களித்தனர்.

தீண்டாமையை ஒழித்து தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் இரண்டாவது தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தீண்டாமை ஒழிப்பைச் செயற்படுத்தும் முகமாக செப்டம்பர் மாதம் முழுவதையும் தீண்டாமை ஒழிப்பு மாதமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரகடனப் படுத்தியுள்ளது.

பேரவையில் புதிய அரசியல் அமைப்பு விவாதத்தில் கூட்டணியினர் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பதைத் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையுரையில் தெரிவித்தார். இந்த விபரம் முழுவதும், இன்று 'ஈழநாடு' உள்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ரகசியமாக நடந்த விஷயாலோசனை கூட்டத்தில் உருவான கூட்டணியின் முக்கிய அரசியல் தீர்மானமான 'தக்க தருணத்தில் தமிழ் தேசிய மன்றம் அமைப்போம்' என்ற தீர்மானம் நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்தது தெரிந்ததே (ச)

# தடையை மீறி 300 இளைஞர்கள்

# அச்சுவேலியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(ஆவரங்கால்)

''தமிழ் ஈழம் அமைப்போம்''என்ற கோஷம் எழுப்பியபடி தடையைமீறி உதயசூரியன் 'பட்ஜைம்' சீருடையும் அணிந்த சுமார் 300 தமிழ் இளைஞர்கள் அச்சுவேலியிலிருந்து ஆவரங்கால்வரை சுமார் 2மைல் ஊர்வலம் நடத்தியதுடன் கூட்டணி பொதுக் கூட்ட மேடைக்கருகில்வந்து ''தலைவர்களின் வேகம் காணாது துரிதம்போதாது'' எனக் கோஷமிட்டபடி கால்மணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்தபின் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் ஊர்வலம் நடக்கப் போவதை அறிந்து ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இரு சிகரங்கள் கட்டப்பட்டிருந்தன.

சரியாகமாலை 6மணிக்குநாலா பக்கங்களிலிருந்தும் சிருடை அணிந்த இளைஞர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அப்போது ஒலிபெருக்கியில் 'தேவன் மாஸ்டர் தலைமையில் நடந்த வழக்காடு மன்ற நிகழ்ச்சி, ஒலிபரப்பப்பட்டது. 'தமிழ் ஈழம் அமைக்கும் பணியில் கூட்டணியினர் தவறிவிட்டனர் என்று கூட்டணியினர் மீது குற்றச் சாட்டு ஆரம்பிக்கப்பட்டபோது ஊர்வலத்திற்கு தயாராகினர். இளைஞர் மத்தியில் பேசிய திரு. சிவபாலசிங்கம் ''பொது சபையில் இளைஞர் 10 பேர் தான். தமிழ் ஈழம் அமைவது எப்படி? நடவடிக்கை குழுவில் எம். பிக்கள் 11பேர் மற்றவர்கள் 10 பேர்! தமிழ் தேசிய மன்றம் அமைவது எப்படி? எம் தலைவர் சொன்னால் ஊர்வலத்தை நிறுத்தியிருப்போம். ஜே. ஆர். சொல்லி எப்படி நிறுத்துவோம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? தமிழ் உங்கள் உயிரென்றால் புறப்படுங்கள்'' என்றார்.

### 6-30 க்கு ஊர்வலம் புறப்பட்டது

சரியாக 6-30 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. பஸ் நிலையத்தை தாண்டிச் சென்ற போது, ஒலிபெருக்கி கார் ஒன்று கடந்து வந்தது. 'தலைவர் கதிரவேலுப்பிள்ளை வந்து கொண்டிருக்கிறார்' என்று அறிவித்தனர். அக்காரின் பின்னால் ஜீப்பில் கோப்பாய் எம். பி. வந்து கொண்டிருந்தார். ஜீப்பை கண்டதும், இளைஞர் உக்கிரமாக கோஷம் எழுப்பியபடி சென்றனர். சிறிது நேரத்தால், உதய சூரியன் கொடி தாங்கிய மற்றொரு ஜீப்பும், அவர்களைக் கடந்து சென்ற போது, அவர்கள் பலத்த கோஷமிட்டனர்.

ஆவரங்கால் சந்தியை நெருங்க, நெருங்க, ஊர்வலத்தின் தொகை அதிகரித்து வந்தது. ஆவரங்கால் சந்தியில் 4 பொலிஸார் கடமையாற்றினர். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். இளைஞர்கள் 'தமிழ் ஈழம் அமைப்போம், இழத்தை மீட்போம்' என்று பலத்த கோஷத்துடன் சென்றனர்.

### அமைதியாக நின்றனர்

மாநாட்டுப் பந்தலுக்கு முன்னால் வீதிக்கு அப்பால் யாழ். பொலிஸ் அதிபர் திரு. எகொடபிட்டியா, உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா, மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நின்றனர். ஊர்வலம், அவர்கள் சமீபமாக வந்து மாநாட்டுப் பந்தலை நோக்கி சென்றது.

பொதுக் கூட்ட மைதானத்தில் எங்கும் ஒரே பரபரப்பாக இருந்தது. அப்போது திரு. அன்னத்துரை மேடையிலிருந்து 'அமைதியாக இருங்கள்' என்று அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஊர்வலத்தில் சென்ற இளைஞர்களை தொண்டர்கள் சிலர் தடுத்தி நிறுத்திய போதும், அவர்கள் உக்கிரமாக பலத்த கோஷமுடன் முன்னேறிக் கொண்டிருந்தனர். மைதானத்திலிருந்த பெண்களும் ஆண்களும் அவசரமவசரமாக எழுந்து அவர்களுக்கு வழிவிட்டு அப்பால் சென்றனர். மேடைக்கு சமீபத்தில் கும்பலாகச்சென்றஇளைஞர்கள், ''செய்யுங்கள் அல்லது செய்ய விடுங்கள்'', ''வேலை போம் வேண்

(8-ம் பக்கம் பார்க்க)

SUMITOMO TYRES & TUBES
சுமிட்டோமோ ரயர், ரியூப்
A/40 சோமசெட் கார்
உரிமையாளர்களுக்கு
ஓர் நற்செய்தி

இதோ வந்துவிட்டது
5·25 X 16 ரயர், ரியூப்கள்
சிறிதளவுதான் கையிருப்பு உண்டு
உங்கள் தேவைக்கு முந்துங்கள்

கிடைக்குமிடம் :
லேடன் ரேடர்ஸ்
சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
9918

### விதியைத் தாண்டுகையில்

# லொறி மோதி சிறுமி பலி!

(யாழ்ப்பாணம்)

வீதியைக் ஓடிக் கடக்கையில் லொறி ஒன்றினுல் மோதப்பட்டு சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் ஆனைக்கோட்டை சாவற்காட்டில் நடைபெற்றுள்ளது,

உத்தியோகப்பற்றற்ற நீதிபதி திரு. கே. சேனுதிராஜா மேல்விசாரணையை முதலாம் திகதிக்கு ஒத்திவைத்து சாரதியான எஸ். தர்மசேகரத்தை 1000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

செல்வராஜா செல்வ ரதினு (6-வயது) என்ற சிறுமியே விபத்தில் பலியானவராவார்.

### தோட்டப் பாடசாலே

## ஆசிரியர்க்கான சேவைக் காலப் பயிற்சி

(கொழும்பு)

அரசு கையேற்றுள்ள தோட்டப் பாடசாலேகளிற் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியின் இரண்டாம், மூன்றும் பாடநெறிகளே நடத்துவதற்கான ஏற்பாடுகளேக் கல்வி அமைச்சகத்தின் தமிழ்ப் பிரிவு பாடவிதான அபிவிருத்தி நிலேயத்துடன் கூட்டுச்சேர்ந்து செய்து வருகின்றது.

இப்பாட நெறிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பாடசாலே விடுமுறை காலத்தின் போது மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலேயில் நடைபெறும்.

ஏபரல் விடுமுறையின்போது கோப்பாய் ஆசிரியர் கலாசாலேயில் நடைபெற்ற முதலாவது பாடநெறியிற் கலந்து கொள்ளத் தவறிய சகல தோட்டப் பாடசாலே ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா, பண்டாரவளேப் பிராந்தியங்களிற் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக அடுத்த மாதம் 9 ம் திகதி முதல் 13 ம் திகதிவரை ஒரு பாடநெறி நடைபெறும். ஏனேய பிராந்தியங்களில் கடமையாற்றும் சகல தோட்டப் பாடசாலே ஆசிரியர்களுக்குமான பாடநெறி அடுத்த மாதம் 14 ம் திகதி முதல் 18 ம் திகதிவரை நடைபெறும். இதன் முதற் பகுதியினர் 9 ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலேக்குச் சமுகமளித்தல்வேண்டும். இரண்டாம் பகுதியினர் 14 ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு அதே இடத்திற்குச் சமுகமளித்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

இப்பாட நெறிகளுக்குத் தகுதியுடைய சகல ஆசிரியர்களும் தங்களது மட்டக்களப்புப் பிரயாணத்துக்கான கடமைப் புகையிரத துணைச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளுதற்குத் தங்களது பிராந்திய கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுதல்வேண்டும் என்றும் திரும்பிச் செல்வதற்கான புகையிரத ஆணைச்சீட்டு பாடநெறி முடிவில் வழங்கப்படுமென்றும் தேவையான அறிவுறுத்தல்கள் அடங்கிய தனித்தனிக் கடிதங்கள் அவ்வாசிரியர்களுக்கு வழங்கும்பொருட்டு உரிய வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் எனவே, உரிய வட்டாரக் கல்வி அதிகாரிகளேத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருவருடகால பயிற்சியினைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் இப்பாடநெறிக்குச் சமுகமளிக்கத் தேவையில்லே எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

சிலிண்டர் போறிங்! றீசிவீவிங்! லேயின் போங்றி!
வால்ப்சிற் பிற்றிங்! கிறுங்பில்லிங்! மெசினிங்!
கெட்பேசிங்! றெட் கிறைன்டிங்!

எல்லா இயந்திரங்கட்கும் திறம்பட செய்து கொடுக்கப்படும்.

**யந்திரம்ஸ்**

138, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
9895

**நைலோன் மீன்பிடி வலேகள்**

ஜப்பான் வலேகள்

| இளே | இஞ்சி | இளே | இஞ்சி |
|---|---|---|---|
| 2 - | 1/2'' | 2 - | 1 1/10'' |
| 2 - | 5/8'' | 2 - | 1 3/16'' |
| 2 - | 9/10'' | 2 - | 2'' |
| 2 - | 1'' | 4 - | 2 1/4'' |

கொறியா வலேகள்

| இளே | இஞ்சி | இளே | இஞ்சி |
|---|---|---|---|
| 12 - | 3 1/2'' | 21 - | 3 1/2'' |
| 15 - | 3 1/2'' | 24 - | 5'' |
| 15 - | 3 3/4'' | 24 - | 5 1/2'' |
| 15 - | 4'' | | |

கிடைக்குமிடம்:

**லேடன் ரேடர்ஸ்**

சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
9919

## கூட்டணித் தலேவருக்கு எ. வி. சங்கம் பாராட்டு

(கொழும்பு)

தமிழர் விடுதலேக்கூட்டணியின் தலேவராக திரு. மு. சிவசிதம்பரம் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அரசாங்க எழுதுவினேஞர்சங்கம் அவருக்குப் பாராட்டுத்தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபரம் வருமாறு;

''இழந்த உரிமைகளே நிலேநாட்டி தமிழ் ஈழத்தை அமைப்பதற்காக கால் நூற்றுண்டிற்கு மேலாக பல்வேறு அணிகளிலும் போராடிவந்த தமிழ்இனத்தை ஓரணியில் ஒன்று திரட்டி அமைக்கப்பெற்ற தமிழர் விடுதலேக் கூட்டணியின் தலேவராக திரு. மு. சிவசிதம்பரம் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை அரசாங்க எழுதுவினேஞர் சங்கம் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

தமிழ்மக்கள் மனமுவந்து அளித்துள்ள இவ்வுயர்ந்த பதவியினே திரு. சிவசிதம்பரம் யாவரும் போற்றும் வண்ணம் வகித்து தமிழ்மக்களின் விடுதலேக்கு வழிகாட்டியாக விளங்குவார் என்ற நம்பிக்கை சங்கத்திற்குண்டு. அன்னுருக்குபக்கபலமாகநின்று செயற்பட சங்கம் என்றும் ஆயத்தமாகவுள்ளது.'' இத்தீர்மானங்களே சங்கம் திரு. சிவசிதம்பரத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. (இ)

## ''பாடசாலேயின்தரம் அதன் கட்டடத்தில் தங்கவில்லே'' — வட மாநிலவித்தியாதிபதி

(யாழ்ப்பாணம்)

''பாடசாலேகள் சிறிதாயிருந்து வசதிகள் குறைந்திருப்பினும் அதன் தரம் உயர்ந்து இருப்பதும் உண்டு என்ற உண்மையை இப்பாடசாலே உணர்த்துகிறது''

இவ்வாறு வட மாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் திருநெல்வேலி றேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலே இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினுர்.

சவேரியார் தேவாலய முன்றலில் நடைபெற்ற இப்போட்டிகள் பாடசாலே அதிபர் திருமதி ஜெ. தவராஜா தலேமையில் நடைபெற்றன.

திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில், இப்பாடசாலே ஆசிரியர், மாணவரது கடமை, கட்டுப்பாட்டு உணர்வு குறித்துப் பாராட்டுத் தெரிவித்தார்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில், இப்பாடசாலே கல்வியைப்போலவே விளையாட்டுத் துறையிலும் முன்னேறிவருவதாகவும், புலமைப் பரிசில் பரீட்சைகள், விவேகானந்த சபையினரின் பரீட்சைகளில் இப்பாடசாலே அதன் முன்மாதிரியைக் காட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பாடசாலே அதிபர் பேசுகையில், ''உடல் உள வளர்ச்சிக்கு விளையாட்டு இன்றியமையாதது. இதனுல்தான் ''ஓடி விளையாடு பாப்பா'' என்று பாரதியாரும் பாடினுர். வருங்கால உலகம் பாலர் கையிலேயே உள்ளது. முதற் தடவையாகப் பெற்றேரை இப்பாடசாலேயில் காணுவது மிக்க மகிழ்ச்சி தருகிறது'' என்று கூறினுர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி ஞா. மாணிக்கவாசகர் பரிசில்களே வழங்கினுர்.

சிறப்பு விருந்தினராக வண. பிதா. ஜே. ஈ. ஜெயசிலன் கலந்துகொண்டார்.

இப்பாடசாலேயில் விளேயாட்டுப் போட்டி நடைபெற்றது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## '''அமிர்' தலேமை கிடைத்தது இனத்திற்குப் பெருமை'' குப்பிழானில் இராஜதுரை எம். பி. பேச்சு

(யாழ்ப்பாணம்)

'திரு. அமிர்தலிங்கத்தின் தலேமைகிடைத்தது தமிழினத்திற்குப்பெருமைதர வல்லது.'

இவ்வாறு மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை, குப்பிழானில் எதிர்க்கட்சித்தலேவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவில் பேசுகையில் சொன்னுர்.

திரு. க. பொ. நடனசிகாமணி தலேமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. இராஜதுரை தொடர்ந்து பேசுகையில் 'தமிழ்பேசும் மக்கள் இன்று இக்கட்டான சூழ்நிலேயில் வாழ்கின்றனர். இந்நிலேயில் அவர்கள் தம் சொந்த விருப்பு, வெறுப்புகளேயோ, கோபதாபங்களேயோ மனதில்கொள்ளாமல் ஒன்றுபட்டு எமது தாயகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அல்லது வருங்காலச் சந்ததி எம்மை திட்டித்தீர்க்கும் என்பதில் ஐயமில்லே' என்ருர்.

மன்னுர் எம்.பி. திரு.எஸ். சூசைதாசன், யாழ். எம்.பி. திரு. வி. யோகேஸ்வரன் உட்பட பலரும் பேசினுர்கள்.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குத்துவிளக்கேற்றிவிழாவை ஆரம்பித்து வைத்தார். (உ)

வி. பியின் பயணக் கட்டுரை 'பாரதத்தில் பன்னிரு நாட்கள்' நாளே இதழில்வெளி வரும்.

### பொப்இசை விழா

(யாழ்ப்பாணம்)

பொப் இசை விழா நல்லூர் கல்யாண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவில் மகேஸ்வரனின் இன்னிசை விருந்தும் மற்றும் பல கலேஞர்களின் பொப் இசை விருந்தும் இடம் பெற்றது. (க-அ)

### இலட்சார்ச்சனே

(யாழ்ப்பாணம்)

வண்ணே ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான இலட்சார்ச்சனே சென்ற 18-ந் திகதி ஆரம்பமாகியது தொடர்ந்து 20 நாட்கள் இலட்சார்ச்சனே நடைபெற்றுப் ஆடிபூரத்தன்று முடிவடையும்,

வரி விளம்பரம்

### விற்பனேக்கு

12'' இங்கிலிஸ் கிறைண்டர், 12'' இந்தியன் கிறைண்டர், இந்தியன் கோப்பி கிறைண்டர், 7-ம் நம்பர் கல்லர், 7.5 H.P. மோட்டார் (LDC), 6 அந். எவரி தராசு, 200 மணிக்கூட்டு தராசு, 56எவரி மேசைத்தராசு 6, பிரதான வீதி,பருத்தித்துறை. 9911

சங்கானேயில் 10 ஏக்கர் தோட்டக்காணி 3 மாமரம், வெங்காயம், மிளகாய், வரகு, வாழை மரங்கள், 2 கிணறு ஆகியவற்றுடன் முழுதாகவோ அல்லது துண்டுகளாகவும் விற்பனேக்குண்டு. விபரங்களுக்கு: D. ஞானப்பிரகாசம், 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 9925

### VACANCY

Office Manager with know- -ledge of bookkeeping and preparation of final accounts. Retired people preferred and also Vacanicies for accounts and audit trainees with mini- -mum G. C. E. (O/L) quali- -fication apply- Tax and Accountig Services, 3/9, Pirapan kulam Lane, Jaffna. 6926

**மு. மூ. மன்ஸூர்**
மனுதாரின் பதிவுபெற்ற தரணி

### பின்னுறுதிக்கட்டளே பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ --- பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இல: 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தைச் சேர்ந்தவரான காலஞ்சென்ற முகமது சுல்தான் முகமது மீராப்பிள்ளே என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

இல: 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தைச் சேர்ந்தவரான முகம்மது சுல்தான் முகமது மீராப்பிள்ளே கைம்பெண் சபுரு உம்மா.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3342 ரி

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மரணச் சொத்தை நிர்வசிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின் உறுதிக்கட்டளே பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1978ஆம்ஆண்டு ஆவணி மாதம் 11ஆந் திகதி முற்பகல்9-00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின உறுதிக்கட்டளே ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளேப்படி
ஒப்பம்:

**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 17-ந் நாளகிய இன்று தேதியிடப்பட்டது. 9696

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# உலகின் மற்றஇனங்களைப்போல் தமிழர் சுதந்திரமாக வாழவிரும்புவதில் என்னதவறு?

## ஆவரங்கால் கூட்டணி மாநாட்டில் 'சிவா' எழுப்பிய கேள்வி

(யாழ்ப்பாணம்)

'ஓரினத்துக்கு மேற்பட்டபல்வேறு இனமக்கள் வாழுகின்ற உலகநாடுகள் பலவற்றில் அந்தந்த இனம் சுயாட்சிபெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றன. ஆங்கில நாட்டில் ஸ்கொட்டிஷ் இன மக்களும் வேல்ஸ் இன மக்களும் தாங்கள் ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தத்தின் பேரில் இணைந்திருந்து பிரிந்துபோவதற்கான கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆங்கில ஆட்சி இந்தப் பிரச்னையை மனிதாபிமானத்துடன் அணுகிஅவர்களுடைய கோரிக்கைகளில் நியாயம் உண்டு என்பதை உணர்ந்து இருநாட்டுக்கும் சட்டம் ஆக்கும் ஒரு சபையை ஏற்படுத்தி அந்தச் சபைக்கும் அச்சபையினுல் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகத்திற்கும் பல அதிகாரங்களைக் கொடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. ஆனுலும் ஸ்கொட்டிஷ் மக்கள் இந்த அதிகாரபரவல் பூரணத்துவம் பெற்றதல்லவென்று அதனை ஏற்கமறுக்கிருர்கள். அதேபோல்தான் கனடாதேசத்திலே பிரஞ்சு மக்கள் ஒரு சமஷ்டி ஆட்சியின்கீழ் இருந்தும்கூட – அவர்களது மொழியான பிரஞ்சு மொழிக்குச் சமஅந்தஸ்துக் கொடுத்தும்கூட – பிரஞ்சு மக்கள் கூடுதலாக வாழும் மொன்றில் மாகாணத்தைத் தனியாட்சி ஆக்கவேண்டுமென்று முயற்சிக்கிருர்கள். அதேபோல் பிலிப்பைன்ஸ் தீவில் முஸ்லிம் மக்களும் கிளர்ச்சி செய்கிருர்கள். எனவே நாம் மட்டும் சுதந்திரமாக வாழவேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு?

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் ஆவரங்காலில் நேற்றுமாலை நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசியமகாநாட்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

அங்குதிரண்டிருந்த ஜனசமுத்திரம் மத்தியில் திரு. சிவசிதம்பரம் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:–

### தியாகச் செம்மல் பிறந்த பூமி

'தியாகத்தின் செம்மல் கோப்பாய் கோமானை அரசியல் உலகத்துக்குத் தந்த தியாக பூமியில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மகாநாட்டில் தலைமைப் பேருரை நிகழ்த்துவதில் பெருமைப்படுகிறேன். 76ம் ஆண்டுவட்டுக்கோட்டை தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மகாநாட்டில் இந்தநாட்டுத் தமிழ் மக்களுடைய முப்பெரும் தலைவர்களை, தமிழ்மக்களுடைய ஒற்றுமையை எடுத்துக்காட்டுமிடத்துக் கூட்டணியின் கூட்டுத்தலைவர்கள் ஆக்கினேம். அதே மகாநாட்டில் தமிழ்மக்களுடைய அரசியல் பாதையில் ஒரு புதிய திருப்பத்தை ஆக்கி இனிமேல் இந்த நாட்டில் தமிழ்இனம் உரிமைபெற்று வாழ்வது என்ருல் அது ஒரு சுதந்திர சோஷலிஸ தமிழ் ஈழத்தில் தான் நாம் உரிமையுடன் வாழ முடியுமென்ற முடிவுக்கு வந்தோம். இந்த முடிவையும் இதற்குப் பின்னணியில் இருந்த தமிழர் ஒற்றுமையையும், பார்த்த அன்றைய அரசாங்கம் இதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று எண்ணி நமது தலைவர்களில் நால்வரைக் கைது செய்தது. உயர்நீதிமன்றத்திலே மூன்று நீதிபதிகளுக்கு முன்னல் நிறுத்தி, கடும் தண்டனைக்கு உள்ளாக்குவதற்கு முற்பட்டது அன்று சிறிமாவோ அரசு அவசரகாலச் சட்டத்தின்கீழ் இந்தக் கடும் நடவடிக்கையை எடுத்தது. இன்று ஜே. ஆர். அரசு அரசியல் திட்டத்திலேயே இவைகளை குறிப்பிட்டுள்ளது.

### வரலாறு இல்லை

''அடக்குமுறையால் சுதந்திர இயக்கங்களை நசுக்கியதாக வரலாறில்லை. ஈழத்துத் தமிழர் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை அரசு உணரும்; உணரச் செய்வோம். உலகத்திலே பல்வேறு நாடுகளில் பிரசித்திபெற்ற அரசியல்வழக்குகள் போல் இந்த வழக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. அமரர்கள் தந்தை செல்வா, ஜீ. ஜீ, திருச்செல்வம் அவர்களுடைய தலைமையில் சட்டரீதியாக அவசரகாலநிலைமை செல்லுபடியாகாது என்றும், அரசியல்ரீதியாக 72ல் ஆற்றிய புதிய அரசியல் திட்டம் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தாதுஎன்றும்,வழக்குஉரைத்து அரசாங்கத்தைப் பின்வாங்கச் செய்து வழக்கையும் தள்ளுபடி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. இந்த இரு தலைவர்களும் - தந்தை செல்வாவும், ஜீ. ஜீ. யும் 46ல் ஒற்றுமைப்பட்டு தமிழ் இனத்தின் தலைவர்களாகத் திகழ்ந்தார்கள். இடைக்காலத்தில் பிரிந்திருந்தாலும் நம்முடைய இறுதிநாட்களில் மீண்டும் இணைந்து ஒற்றுமைப்பட்ட ஓர் இயக்கமாகிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களானுர்கள். அந்தக் கட்டத்தில் அவர்கள் மறைந்தது நம் இனத்துக்கு ஒருபேரிழப்பு. ஆனுல், அவர்கள் வழியில் வந்த நாம், இந்த ஒற்றுமையை சிதையவிடாமல் பாதுகாத்தோம். ஒற்றுமையைத்தான் மக்கள் விரும்புகிருர்கள் என்பதை சென்ற பொதுத்தேர்தலில் கூட்டணி வேட்பாளர்களுக்கு பூரண ஆதரவுகொடுத்தது மட்டும் அல்லாமல் ஒற்றுமைக்கு மாருக இருந்தவர்களை மக்கள் நிராகரித்தும் விட்டார்கள். இன்றைக்கு மீண்டும் ஒரு சிலரும், ஒருசில சக்திகளும் இந்த ஒற்றுமைக்கு மாசு கற்பிப்பதற்கும், இதைக் குலைப்பதற்கும் சிறு முயற்சியெடுக்க முனைகிருர்கள். அவர்களுக்கு பணிவான ஒரு வேண்டுகோள் விட விரும்புகிறேன். ''தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்டுள்ள பணி மகத்தான ஒன்று. நீங்களும் வாருங்கள்; ஒன்று சேர்ந்து உழைப்போம்'' என்று அவர்களைக் கைகூப்பி வேண்டுகிறேம்.

### தந்தைசெல்வா கையாண்ட யுக்தி

72-ம் ஆண்டு ஒரு புதிய அரசியல் திட்டத்தை சிறிமாவோ அரசாங்கம் ஆக்குவதற்கு முனைந்தது. அன்று தமிழ் மக்கள் மத்தியிலே வெவ்வேறு கட்சிகளாக, வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்தவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இனிமேலும் ஒற்றுமைப்பட்டு ஒருவழியில் செல்லாவிட்டால் தமிழ் இனம் இந்தநாட்டிலே நிரந்தரமாக இரண்டாம்தரப் பிரஜைகளாகத் தள்ளப்படுவார்கள் என்ற முடிவுக்கு ஒவ்வொரு தமிழ்த் தலைவர்களும் வந்தார்கள். அந்த முடிவுக்குப் பின் எடுத்த நடவடிக்கை தான் கருத்துவேற்றுமைகளை மறந்து தமிழ் மக்கள் மத்தியில் மூன்று பெரும் அரசியல் ஸ்தாபனங்களாகிய தமிழரசுக் கச்சியும், தமிழ்க் காங்கிரசும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒன்றிணைந்து தமிழர் கூட்டணியாகியது. ஒன்ருக இயங்கி, பெரும் நாகரிகம் படைத்த நாடுகளிலும் சிறுபான்மை மக்கள் பெறுகின்ற குறைந்தபட்ச உரிமைகளையாவது பெற்றுவிடலாமென்று பல வழிகளிலும் தமிழர் கூட்டணி முயற்சித்தது. ஆனுல் அரசாங்கம் அவசரகால நிலைமையையும் அதன் கீழ் ஆக்கிய சட்டங்களையும் பாவித்து உரிமைகளைப் பெறுவதற்கு உரிமைகளைக் கொடுப்பதற்கு முற்றுமுழுதாக மறுத்தது மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கைகளை உதாசீனம்செய்தது. இதைப்பார்த்தபின்புதான் அரசியலில் கையாளப்படுகின்ற ஒரு பலத்த ஆயுதமாகிய, தன் பதவியைத் துறந்து, முக்கிய பிரச்னை ஒன்றை முன்வைத்து உபதேர்தல் நடத்துகின்ற வழியை, தந்தைசெல்வா கையாண்டார். இரண்டு ஆண்டுகளாக இந்த உபதேர்தலை நடாத்தாமல் இருந்து, அதற்குப் பின்பு வைத்த உபதேர்தலில் அரசாங்கத்தின் சார்பில் பிரசாரம்செய்த சிங்களத் தலைவர்கள் தமிழர்கூட்டணி பிரிவினைப்பாதையில் செல்லுகின்றது என்று மக்கள் முன் கூறினுர்கள். அந்தத் தேர்தல் இறுதிக்கட்டங்களிலே பிரிவினையா, இல்லையா என்ற கேள்விகளுக்கு மறுமொழிகூறுகின்றதேர்தலாக அமைந்தது. மக்கள் அமோகமான வெற்றியை தமிழர் கூட்டணிக்கும் தந்தை செல்வாவுக்கும், கொடுத்தார்கள். அந்தத்தேர்தலில் தாம் வெற்றியீட்டிய தினத்தன்று தந்தைசெல்வா, தமிழ்மக்கள் மறக்கமுடியாத தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பாவித்து 16ம் 17ம் நூற்ருண்டிலே போர்த்துக்கேயருக்கு இழந்த இறைமையை மீண்டும் பெறவேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்' என்று சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் கூறினுர். எவையுமே சிங்கள அரசு இம்மியளவாகுதல் நமது உரிமைகளைக் கொடுப்பதில்லையென்று கொடுப்பதாகத்தோன்றவில்லை. ஆழ்ந்து சிந்தித்ததன்பின்பு தான்76-ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழர்கூட்டணியின் முதல் தேசியமாநாட்டில்தமிழ்தேசிய இனம்தனதுசுயநிர்ணயஉரிமையைப் பாவித்து ஒரு சுதந்திர முழு இறைமையுள்ள சமயப் பற்று அற்ற சோஷலிஸ தமிழ் ஈழத்தை அமைப்பது தவிர்க்க முடியாத ஒன்ருகிவிட்டதென்று பிரகடனம் செய்தது. அந்தப்பிரகடனத்துக்கு ஒப்ப உலகத்திலே இவ்விடுதலைக்காகப் போராடுகின்ற பல இயக்கங்களின் போக்குகளுக்கு ஒப்ப தமிழர் கூட்டணியினுடைய பெயரை தமிழர் விடுதலைக் கூட்டணியாக அதே மாநாட்டில் மாற்றி அமைத்தோம். இந்தப்பெயருடன் தான் சென்ற தேர்தலில் போட்டியிட்டோம்.

### செயல்முறையில் புதிய திருப்பம் இம்மாநாடு ஏற்படுத்தும்

சென்றஓர் ஆண்டாக இயங்கியும் வந்தோம். ஒரு இணைந்த ஸ்தாபனமாகத் தொடர்ந்தும் இருப்பது ஒரு சுதந்திரப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துகின்ற ஒரு ஸ்தாபனத்துக்கு வேண்டிய கட்டுக்கோப்பு, ஒழுக்கமும், இணைப்பும் இல்லை என்பதை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை நெருக்கமாக இணைக்கப்பட்ட ஒரு கட்டுக்கோப்பான இயக்கமாக மாற்றுவதற்கு அந்தப் புதிய அமைப்பு விதிகளை ஆக்கி தமிழர் விடுதலைக் கூட்டணியைப் புனருத்தாரணம் செய்து இந்த இரண்டாவது தேசிய மாநாட்டை நடாத்திக்கொண்டிருக்கிறேம். தமிழ் ஈழத்தில் நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் பட்டி தொட்டிகளெல்லாம் கிளைகளை அமைத்து ஆர்வம்கொண்ட இளைஞர்களையும் பெண்களையும், பெரியோர்களையும் அங்கத்தவர்களாக்கிப் படிப்படியாக மேலோங்கிச் சென்று ஒரு தலைமைப் பீடத்தை அமைத்துள்ளோம். கிட்டத்தட்ட இலட்சியத்தில் பற்றுள்ள இயக்கத்திலே நம்பிக்கைகொண்ட இருபதினயிரம் அங்கத்தவர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் இன்றைக்கு இந்த மாநாடு அமைந்திருக்கிறது. வட்டுக்கோட்டை மாநாடு நமது அரசியல் சிந்தனையில் ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்தது போல் இந்த மாநாடு செயல் முறையில் ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்திருக்கிறது.

### நாடு விடுதலை பெற்றபோது . . .

இந்தநாட்டுக்குச் சுதந்திரம் வந்தபொழுது அந்தச் சுதந்திரத்தை எப்படி நிர்வகிப்பது என்பதைத் திர்மானிக்கின்ற பொறுப்பு இந்த நாட்டுமக்களிடம் விடப்படவில்லை. அதற்கு மாருக ஆங்கிலேயர்களே ஒரு அரசியல் திட்டத்தை இந்த நாட்டுக்குப் புகுத்தினுர்கள். தமிழ்மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தமிழ்க்காங்கிரசும் அதன் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் பல முயற்சிகள் எடுத்தும் ஆங்கிலேயர்கள் தங்களுடைய சொத்துக்களைப் பாதுகாக்கின்ற நோக்கத்துடன் சிங்களத் தலைவர்களிடமே அதிகாரத்தை விட்டுச்சென்ருர்கள். சோல்பரி அரசியல் திட்டம் நாட்டுக்கு உகந்ததல்ல என்று பலர் கருதினுர்கள். தமிழ் மக்கள் தங்களுக்கு உகந்ததல்ல என்று திட்டவட்டமாக எண்ணினுர்கள். பல அரசியல் தலைவர்கள் பலமுறைகளில் சோல்பரி அரசியல் திட்டத்தைத் திருத்துவதற்கு எத்தனித்தார்கள். ஆனுல் இந்த முயற்சிகள் எதுவும் பூரணத்துவம் அடையாமல் இடையிலேயே கைவிடப்பட்டன. சோல்பரி அரசியல் திட்டத்திலே இனத்தாலும் மதத்தாலும் சிறுபான்மையானவர்களுக்கு 29ம் சரத்து சிறு பாதுகாப்புக்கொடுத்தது. பிரிவிக்கவுன்சில் இந்த 29ம் சரத்தை 2/3 பெரும்பான்மை வாக்குகளாலும் மாற்றமுடியாது என்ற அபிப்பிராயத்தைக் கூறியதன் பின்பு சோல்பரி அரசியல் திட்டத்தைத் திருத்துகின்ற வேலையைவிட்டு புதிதான ஒரு அரசியல் திட்டத்தை ஆக்கவேண்டும் என்ற முடிவுக்கு சிறிமாவோ அரசாங்கம் வந்தது. ஒரு நாட்டுக்கு 'ஓர்அரசியல்திட்டத்தை உருவாக்குகின்றபொழுது கூடியவரையில் அந்தநாட்டு மக்களுடைய ஒத்துழைப்பையும் சம்மதத்தையும் பெற முயற்சிப்பது அரசியல்திட்டங்கள் உருவாக்குவதில் ஒருமரபு. இந்தியாவுக்கு சுதந்திரத்தின் பின் உருவாக்கப்பட்ட அரசியல் திட்டத்தில் இந்த மரபை ஒட்டி செயலாற்றவேண்டுமென்று பண்டிதர் ஜவஹர்லால் நேருபோன்றவர்கள்முனைந்துநின்ருர்கள். ஆனுல் நமது நாட்டைப் பொறுத்தவரையில் முதல் அரசியல் திட்டம் அந்நியர் ஆக்கிக்கொடுத்தது. இரண்டாவது அரசியல் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் எம்மைப் பொறுத்தவரையில் அந்நியர்கள்தர் ஆக்கினுர்கள். தமிழ்மக்களுடைய சம்மதத்தையோ, அல்லது ஒத்துழைப்பையோ, அல்லது அவர்களுடைய நியாயமான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவோ எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

### மூன்ருவது அரசியல் திட்டம்

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இப்பொழுது மூன்ருவது முறையாக ஒரு புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே இப்படியாக ஆட்சிகள் மாற மாற புதிய அரசியல் திட்டங்கள் அமைப்பது ஒரு புதிய அரசியல் திட்டமரபாகி வருகின்றது. ஆனுல் எம்மைப் பொறுத்தவரையில் எந்த அரசாங்கம், எந்த அரசியல் திட்டத்தைக் கொண்டுவந்தாலும் எமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற அரசியல் திட்டம் எதுவும் கொண்டுவரப்படவில்லை. மேலும் எமது சம்மதத்தையோ, ஒத்துழைப்பையோ பெறுவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஐக்கியதேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மொழி, இனம், போன்ற பிரச்னைகளுக்கு ஒரு வட்டமேசை மாநாடு கூட்டி அவைகளைத் தீர்ப்பதற்கு வழி காணுவோம் என்று கூறியிருந்தது. ஆனுல் நடைமுறையில் இந்தப்புதிய அரசியல் திட்டத்தை ஆக்கமுன்பு வெவ்வேறு கட்சிகள் மத்தியிலே கருத்துக்களைப் பரிமாறி முடிவை எடுக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்மக்களை நமக்கு ஒரு தெளிவான கட்டளை தரும்படி கேட்டிருந்தோம். அந்தக் கட்டளையாவது, 'இந்த நாட்டில்தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதாக ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற தமிழீழ அரசை நிறுவுவது.' இந்தக்கட்டளையை தமிழ்மக்கள் தங்கள் வாக்குமூலம் ஐயத்துக்கு அப்பால் கொடுத்துள்ளார்கள். இதை மேலும் வலியுறுத்த அரசாங்கத்தின் சார்பில் தேசியஅரசுப்பேரவையில் கொண்டு வரப்பட்ட கொள்கை அறிக்கைக்குத் திருத்தமாக நமது ஆட்சிமன்றக்குழு இதே கருத்தை மீண்டும் கூறியது. தமிழ்மக்களுடைய எண்ணங்களுக்குச் சிறிதேனும் அக்கறை காட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

# உலகின் மற்றஇனங்களை...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கின்ற அரசு என்றால் தாம் ஆக்கியிருக்கும் புதிய அரசியல் திட்டத்தில் இந்த தமிழ்மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏதாவது ஒரு நிறைவு காட்டியிருக்கவேண்டும். இதை கருத்தில் கொண்டுதான் இந்த அரசாங்கம் நிர்வாகத்தை ஓர் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கும் அரசியல் திருத்ததிட்டங்களைக் கொண்டுவந்தபொழுது நாம் இந்த விவாதத்தில் பங்கு கொள்ளவில்லை. அதேகாரணத்துக்காகத்தான் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு ஒரு உபகுழு நியமித்தபொழுதும் நாம்பங்குகொள்ளவில்லை. இப்பொழுது .புதிய அரசியல் திட்டம் வருகின்ற பொழுதும் அதே காரணத்துக்காக நாம் பங்குகொள்ளமாட்டோம்.

## புதிய அரசியல்திட்டம்: எமக்கு ஏமாற்றம்

ஆனால் இந்த நாட்டிலும் எங்கள் பிரச்சினையில் அனுதாபமும், அக்கறையும் கொண்ட வேறு சிலநாடுகளிலும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தமிழ் மக்களுடையஉரிமைகளை வழங்குவதற்குச் சில முயற்சிகள் எடுக்கும் என்றும், இதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி, அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும் ஒரு அபிப்பிராயம் இருந்ததை நாம் அறிவோம். எம்மைப் பொறுத்தவரையில் அப்படி ஏதும் நடவாது என்று நாம் எண்ணியிருந்தோம். நல்லெண்ணத்துடன் நம்மில் அக்கறை கொண்டவர்கள் கூறுகின்ற இந்தக் கருத்துகளுக்கும் நாம் செவிசாய்க்க வேண்டுமென்று எண்ணிப் புதிய அரசியல் திட்டம் உருவாக்கும்வரையும் பொறுத்திருந்தோம். புதிய அரசியல் திட்டத்தில் மொழிக்குச் சில உரிமைகள் வழங்கப்பெற்றிருந்தாலும் அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கும், எங்களுடைய பகுதிகளில் அதிகாரம் தமிழ் மக்கள் கையில் ஆக்குவதற்கும், நிலத்தைப் பாதுகாப்பதற்கும் எந்தவிதமான வழிவகைகளுக்கும் இந்தப் புதிய அரசியல் திட்டத்தில் இல்லையென்பதை நமது நண்பர்களும் உணர்வார்கள். எமக்கு ஏதாவது உரிமை கொடுத்திருந்தால் அது தமிழ் மக்களுடைய, தமிழ் மக்களின் கட்சிகளுடைய தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய இடைவிடாது தொடர்ந்த எதிர்ப்பினால் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், நமது அதிகாரம் இல்லாத மொழி உரிமைகள் வெறும் ஏட்டுச்சுரைக்காய் என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மை. ஆகையினால் இன்றைக்கு எம்மில் நல்லெண்ணம் கொண்டவர்கள்கூட இந்த அரசாங்கமும் மற்ற அரசாங்கங்களைப்போல நமது அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவில்லையென்பதை ஏற்றுக்கொள்வார்கள். இது ஒருபுறம் இருக்க, சென்ற ஆண்டு இந்த நாட்டில் நடந்த சம்பவங்களை பார்க்கும் பொழுது இரண்டு இனங்களும் ஒன்று சேர்ந்து ஓர் இணைப்பில் வாழமுடியாது என்ற முடிவிற்கே யாரும் வரவேண்டும். சென்ற தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு என்றுமிராத ஆதரவைக்கொடுத்தார்கள். உங்கள் கட்டளைகளை ஏற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்படமுற்பட்டோம். இதைப் பார்த்த சில அரசியல் சக்திகள் இந்த ஒற்றுமையைக் குலைக்கவும், சுதந்திர இயக்கத்தைச் சிதைக்கவும் தமிழ் மக்கள் மேல் காட்டுமிராண்டித்தனமான வன்செயல்களைப் பாவித்தார்கள்.

## சென்ற ஆண்டு சம்பவங்கள்

சென்ற 77-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சரித்திரத்தில் ஒரு அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமான கட்டம் என்பதை மறுக்க முடியாது. இந்தச் செயல்களில் ஒரு திட்டமிட்ட பின்னணி இருப்பது தெரிகிறது. தமிழ்மக்களுடைய பொருளாதாரத்தை நசுக்கித் தங்கள் நாட்டிலேயே பாதுகாப்பற்ற முறையிலே வாழ வைத்து சிறுவர்களுடைய உயிர்களை வாங்கி கல்வி கற்றவர்களை இம்சித்து அறிவுக் களஞ்சியங்கள் எல்லாவற்றையும் தீக்கிரையாக்கியது.

இந்த வன்செயல்களை ஊக்குவித்தவர்கள் தமிழ்மக்கள். மேலும் தலைதூக்கி சுதந்திரம் கேட்கமாட்டார்கள் என்று எண்ணினர். ஆனால் அதற்கு அதற்கு மாறாக நமது ஒற்றுமை மேலும் வலுப்பெற்று, பல்லாண்டுகளாக சிங்கள மக்கள்மத்தியில் வாழ்ந்தவர் கூட இனிமேல் நமக்கு ஒன்றென்றால் அது தமிழ்ப் பகுதியில்தான் என்ற முடிவுக்கு உந்தப்பட்டுள்ளார்கள். ஆகையினால் நாம் வட்டுக்கோட்டையில் எடுத்த முடிவு சரியான முடிவு என்பதை சென்ற ஆகஸ்ட் நிகழ்ச்சிகள் வலியுறுத்தியுள்ளன. சென்ற ஆகஸ்ட் நிகழ்ச்சிகளில் இன்னும் ஒன்றை நாம் கண்டோம் 58,61ல் மலைநாட்டில் வாழ்ந்த தமிழ் மக்கள் அந்த வன்செயல்களுக்கு ஆளாக்கப்படவில்லை. ஆனால், 77 ஆகஸ்டில் அவர்கள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டதை நாம் அறிவோம். இதன் விளைவாக இந்த நாட்டின் பிரசைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களே பிரசாவுரிமையைரத்துச் செய்துவிட்டு இந்தியா செல்ல எத்தனிக்கிறார்கள். அவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் பணிவான வேண்டுகோள் விடுக்கின்றது. 'நீங்கள் இந்த நாட்டுப் பிரசைகள் இந்த நாடு செழிப்புற உழைத்தவர்கள் இந்த நாட்டில் வாழும் எந்த மகனுக்கும் உள்ள உரித்து உங்களுக்கும் உண்டு ஆனால் இன்று நீங்கள் வசிக்கும் இடங்களில் பாதுகாப்பு அற்ற தன்மையினால், தமிழர் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வாருங்கள் என்று அழைக்கின்றோம். ஒரு சில விஷமிகள் பொய்யான பிரசாரம் செய்தாலும், வடக்குக்கிழக்குக்கு மலைநாட்டில் இருந்த வந்தவர்கள் பாதுகாப்பாக வாழ்க்கையைத் தேடிக் கொண்டு இருக்கிறார்களென்பதை நாம் கூறுகின்றோம். இந்தப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள் மலைநாட்டில் இருந்து வருகின்ற சகோதரர்களை நமது சொந்த உறவினர் போல் வரவேற்று உபசரித்து வாழ வையுங்கள் என்று கேட்கின்றேன்.

## ஆகஸ்ட் கலவரம் கற்பிக்கும் பாடம்

ஆகஸ்ட் கலவரங்களால் சில பாடங்களை நாம் கற்க வேண்டும்.

ஒன்று, தமிழ்மக்கள் எதிர் காலத்தில் முதலீடு செய்வது அத்தனையும் வடக்கு கிழக்கு மாகாணத்திலாய் இருக்க வேண்டும்.

இரண்டு, அவசியமற்று பெண்களும் பிள்ளைகளும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கப்பால் வசிக்காமல் இருக்க வேண்டும்.

மூன்று, நமது இளைஞர்கள் அரசாங்க சேவையை நாடிச் செல்வதை விட்டு விவசாயத்திலும் சொந்தத் தொழில்கள் செய்வதிலும் கூடுதலாகக் கவனம் செலுத்தவேண்டும்.

நான்கு, நமது பிரதேசங்களில் நமதுஉயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு ஆயத்தங்கள் செய்ய வேண்டும்.

## நமது கோரிக்கை புதுமையானதல்ல

இன்றைக்கு உலகத்திலே பல்வேறு நாடுகளில் ஒரு இனத்துக்கு மேல் பல இனம் வாழுகின்றபோது அந்தந்த இனங்கள் சுய ஆட்சி பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றன. உதாரணமாக ஆங்கில நாட்டை எடுத்துக்கொண்டால் ஸ்கொட்டிஷ் இன மக்களும், வேல்ஸ் இன மக்களும் தாங்கள் ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தத்தின்பேரில் இணைந்திருந்து பிரிந்துபோவதற்கான கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆங்கில ஆட்சி இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகி அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயம் உண்டு என்பதை உணர்ந்து ஸ்கொட்டிஷ் தேசத்துக்கும் வேல்ஸ் தேசத்துக்கும் ஒரு சட்டம் ஆக்கும் சபையை ஆக்கி, பல அதிகாரங்களை அந்தச் சபைக்கும் அந்தச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்துக்கும் கொடுப்பதற்கான சட்டத்தை கொண்டுவந்திருக்கின்றன. ஆனால் ஸ்கொட்டிஷ் மக்கள் இந்த அதிகார பரவல் பூரணத்துவம் பெற்றது அல்லவென்று அந்தச் சட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள். அதே போல்தான் கனடா தேசத்திலே பிரெஞ்சு மக்கள் ஒரு சமஷ்டி ஆட்சியின்கீழ் இருந்தும்கூட அவர்களுடைய மொழியாகிய பிரஞ்சு மொழிக்கு சரிசம அந்தஸ்துக் கொடுத்தும்கூட- பிரஞ்சு மக்கள் கூடுதலாக வாழும் மொன்றில் மாகாணத்தைத் தனியாட்சி ஆக்கவேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். அதேபோல்தான் பிலிப்பைன்ஸ் தீவில் முஸ்லிம் மக்களும் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆகையினால் நாம் நமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டுமென்று கேட்பது ஏதோ புதுமையானதோ அல்லது உலக வழக்கத்துக்கு மாறானதோ அல்ல. இதை அரசாங்கமும் ஓரளவில் உணர்ந்திருக்கிறது என்பதற்கு அடையாளம் அவர்களது மாவட்ட அமைச்சர் திட்டம். ஆனால் இந்தத் திட்டம் முற்றாக ஜனாதிபதியின் ஆதிக்கத்தின்கீழ் இயங்குகின்ற ஒரு திட்டமாக இருப்பதைத்தான் நாம் காண்கின்றோம். உலகத்திலே மற்ற நாடுகளில் நடப்பவற்றைப் பார்த்து தமிழ் மக்கள் தங்கள் மறுக்கமுடியாத சுய நிர்ணய உரிமையைப் பாவிப்பதற்கு, அவர்களுடைய அரசியல் திட்டத்திலேயே தமிழ் மக்கள் மத்தியிலேயே குறிப்பிட்ட சர்வஜனவாக்கெடுப்பைஇந்தக் கேள்விக்கு தீர்ப்புக் காண்பதற்கு பாவிக்கவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் சுதந்திரத்தை விரும்புகின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு பூரண சுதந்திரத்துக்காக, ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக, நிறவெறி பிடித்தவர்களுக்கு எதிராகப் போராடுகின்ற மக்களுக்கு எங்கள் ஆதரவையும் ஆசியையும் கூறுகின்றோம். இன்றைக்கு உலகத்திலே இரண்டு அணிகள் உண்டு. ஒன்று சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்கும், சமதர்மத்துக்கும் போராடுகின்ற அணி. மற்றது ஏகாதிபத்தியத்துக்கும், நிறவெறிக்கும், அடிமைத்தனத்துக்கும் இயங்குகின்ற அணி. நாம் முதல் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

நமது அரசியல் பணி நமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதுபோல தமிழ் ஈழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதானவழிகள் மூலமோ, நேரடிப் போராட்டம் மூலமோ, இயக்கமூலமோ நடவடிக்கை எடுப்பது. இதற்கான திட்டங்களைக் காலத்துக்குக்காலம் நமது செயற்குழு தீட்டி அவைகளைச் செயல்படுத்துவதற்கு உங்கள் எல்லோரையும் அழைக்கின்றோம்.

## மிளகாய், வெங்காய இறக்குமதியைக் கைவிடுக

இந்த அரசியல் பணியைச் செய்கின்ற அதே நேரத்தில் தமிழ் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சியில் நமது இயக்கம் முழுப்பங்கு கொள்ள வேண்டும். இந்த அரசு, மக்கள் இதுவரைகாலமும் அனுபவித்துவந்த சில சலுகைகளை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பறிக்கிறோம். என்று கூறுகின்றார்கள். ஆனால் சென்ற ஓர் ஆண்டிலே எந்த விதமான ஆக்கபூர்வமான பொருளாதார வளர்ச்சியையும் நாட்டில் பொதுவாகத் தமிழ்ப்பகுதிகளில் நாம் காணவில்லை. அவர்கள் தங்களுடைய முழுக் கவனத்தையும் சக்தியையும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்திலேயே செலுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தினால் நமக்கு அண்மையில் வரக்கூடிய நன்மை மிகவும் குறைவு. இந்த அரசு தமிழ்ப் பகுதிகளின் பொருளாதாரத்தை வளர்க்காமல்விட்டது மாத்திரமல்ல, இருக்கும் பொருளாதாரத்தையே படிப்படியாகக் குன்றச் செய்வதை நாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. மிளகாய், வெங்காயச் செய்கையினால் நமது விவசாயிகள் சென்ற ஆண்டுகளில் ஓரளவு சுபிட்சத்தைப் பெற்றார்கள். இன்று கட்டுப்பாடற்ற இறக்குமதியினால், இந்தப் பொருட்கள் விலை விழுந்ததன் காரணத்தினால் வெங்காயம், மிளகாய்ச் செய்கையைக் கைவிடும்படியாக நேர்ந்துவிட்டது. இந்த அரசை நம் விவசாயிகள் சார்பிலே கேட்டுக்கொள்வது, இறக்குமதியைத் தடை செய்யுங்கள்.

## ஒரு வேண்டுகோள்

நமது விவசாயிகள் ஒரே பொருளை உற்பத்திசெய்கின்ற பழக்கத்தைவிட்டு வெவ்வேறு பொருட்களை மாற்றி மாற்றிச் செய்கின்ற பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இதைப்போல்தான் தொழில்துறையைப்பொறுத்தவரையிலும் இந்த அரசாங்கத்தின் போக்கினால் பலதொழில்கள் கைவிடப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இறக்குமதிசெய்கின்ற சீனியின் விலை உயர்வாக இருந்த காரணத்தினால் நமது பகுதிகளில் கருப்பட்டி செய்கின்ற தொழிலால் பலர் வாழமுடிந்தது. இன்றைக்கு சீனியின் விலையைக் குறைத்த காரணத்தினால் இந்தத் தொழிற்சாலைகள்எல்லாம் மூடப்பட்டுவிட்டன. அரசினுடையகொள்கை எதுவாக இருந்தாலும் நமதுமக்கள், நமது பகுதிகளிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாவிக்கின்ற பழக்கத்தைக் கூடுதலாகப் பழகிக்கொள்ள வேண்டும். மகாத்மாகாந்தியினுடைய அரசியல் தத்துவத்தில் ஒரு பகுதியாக சுதேசியப் பொருட்கள் பாவிக்கின்றஇயக்கம் இருந்ததை நாம் அறிவோம். அந்த அடிப்படையில் நாமும் நமது அரசியல் இயக்கமும் ஒருபகுதியாக நமது நாட்டில் உற்பத்திசெய்கின்ற பொருட்களைக் கூடுதலாகப் பாவிக்கின்ற பழக்கத்தைப் பழகிக்கொள்ளவேண்டும். நமது புது அமைப்புவிதிகளின்படி பொருளாதாரத்துக்குப் பொறுப்பாக எங்களுடைய சிரேஷ்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும் பொருளாதாரத்தைப்பற்றி சிறப்பான சிந்தனைகளை உடையவருமான திரு. துரைரத்தினம் அவர்களைச் செயலாளராக நியமித்துள்ளோம். நமது பொருளாதார வளர்ச்சியின் நோக்கமாக நிலத்தைப் பாதுகாப்பதும், உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதும் பின்தங்கிய சமூகத்தினுடைய நலனைப் பேணுவதும், உள்ளூர் பொருட்களை கூடுதலாகப் பாவிப்பதும் நோக்கங்களாக இருக்கவேண்டும். எமது மூன்றாவது முக்கியமான பணி சமூகத்திலே ஏற்றத்தாழ்வை அகற்றி, சாதி வித்தியாசங்களை ஒழித்து மேலும் ஒற்றுமைப்பட்ட ஓர் இனத்தை உருவாக்குவது பல ஆண்டுகளாக நமது சமூகத்திலே ஊடுருவி இருக்கும் தீண்டாமை முழுதாக ஒழிக்கப்படவேண்டும். இனத்தின் பெயரால உயர்சாதி மக்களை நான் பணிவாக வேண்டுகிறேன், திறக்கப்படாத ஆலயங்களைத் திறந்துவிடுங்கள்; திறக்கப்படாத தேநீர்க்கடைகளைத் திறந்துவிடுங்கள், எல்லோரும் நமது சகோதரர்கள் என்ற முறையிலேயே பழகுங்கள் என்று வேண்டுகிலேன். இப்பொழுது பல சிறுபான்மை மக்கள் சொந்தக் காணிகளில் வசிக்காமல் பிறர் காணிகளில் வசிப்பதை நாம் அறிவோம். காணி படைத்தவர்களை ஒரு பூமிதானஞ்செய்கின்ற ஒரு இயக்கத்தில் பங்கு கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## பல்கலைக்கழகத்துக்கு உதவுக

தமது இனம் எத்தனையோ இன்னல்களுக்கிடையில் பல விதங்களில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இன்னும் தலைநிமிர்ந்து வாழ்கின்றது என்றால் அது நமது கல்வியினால். தொடர்ந்து ஆசிரியர்களும், பெற்றோர்களும் நமது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி அளிக்கவேண்டும். மேலும் விரைவில் ஓர் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைய இருக்கிறது. ஆனால் நாட்டில் மற்றப் பகுதிகளில் நடக்கின்ற பல்கலைக்கழகங்களுக்கு அரசு தாராளமாக உதவிஉதவிசெய்கின்ற நேரத்தில்நமதுபல்கலைக்கழகம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கக் கூடும். இந்தப் பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்குவதற்கு தரத்தில் வேறுஎந்தப் பல்கலைக்கழகத்துக்கும்கும் களைக்காது இயங்கவேண்டும் என்றால் பொதுமக்கள் பூரண ஆதரவைஇந்தப்பல்லைக்கழகத்துக்குக் கொடுக்கவேண்டும். பல்கலைக்கழகத்தில் பயில வருகிற பிள்ளைகளில் திருமலை, மலையகம்போன்ற இடங்களில் இருந்துவருகின்றபிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகசூழ்நிலையில்வாழ்கின்ற பெரியார்கள் நியாயமான வாடகைக்கு வீடுகள் கொடுத்து உதவவேண்டும். எல்லாத் தருமங்களிலும் கல்வித்தர்மம் சிறந்தது என்று கூறப்படுகின்றது. பணம் படைத்த தமிழ்மக்களைப் பல்கலைக்கழகத்துக்குத் தாராளமாகப் பண உதவிசெய்யுமாறு கேட்கிறேன். அதேபோல் நல்லதொரு சிறந்த நூல் நிலையத்தை ஆக்குவதற்கும் உபயோகமாக நூல்களை கொடுத்து உதவுமாறு கேட்கிறோம்.

## சுதந்திரத்தை ஆதரிப்பவர்களே எமக்கு அனுதாபம் தாருங்கள்

இப்படியாக எல்லா முனைகளிலும் தமிழ் இனத்தைமுன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்ல தமிழர் விடுதலைக்கூட்டணி முனைந்திருக்கிறது. காலத்துக்குக்காலம் தமிழ்மக்களை இன்னும் ஆயிரம் ஆயிரமாக அங்கத்தவர்களாகச் சேரும்படி வேண்டுகிறோம். காலத்துக்குக் காலம் நாம் ஆரம்பிக்கின்ற இயக்கங்களில் சேருமாறு வேண்டுகின்றோம் தென் இலங்கையில் வாழும் முற்போக்குச் சக்திகளைத்தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை அங்கீகரித்து அவற்றுக்கு அனுதாபமாக இயங்கவேண்டுமென்று கேட்கிறோம் உலக அரங்கிலே சுதந்திரத்தை ஆதரிக்கும் சக்திகளை நமக்கு அனுதாபமாக இயங்கவேண்டுகின்றோம்.

# தொழிலாளி விவசாயிகளுக்கே தமிழ்ஈழத்தில் முதலிடம்'

## ஆவரங்கால் மாநாட்டில் துரைரத்தினம்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ சோஷலிஸ குடியரசு மலர்கையிலே தொழிலாளி விவசாயிகளுக்கு முதலிடம் வழங்கப்படும்; வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் தமிழீழம் பொருளாதார பலம்படைத்த நாடாக மிளிரும்''.

இவ்வாறு பருத்தித்துறை எம். பி.யும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விவசாய-பொருளாதாரத்துறை தலைவருமாகிய திரு. கே. துரைரத்தினம் ஆவரங்கால் ஜி. ஜி. பொன்னம்பலம் அரங்கில் விவசாய-தொழிலாளர் மகாநாட்டில் தலைமைப் பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

''நமது தமிழீழம் 7000 சதுரமைல்கள் பரப்புடையது என நாம் கூறுகின்றபோதிலும் 300 சதுரமைல் பிரதேசத்திலே மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள். அதிலும் சிறப்பாக குடாநாட்டில் ஏழரை லட்சம்மக்களில் மூன்றரை லட்சம் மக்கள் செம்பாட்டுத் தரையாக உள்ள 60 சதுரமைல் பரப்பிலேயே விவசாய மேம்பாட்டுடன் வாழ்கின்றார்கள்.

### உலகிலேயே குடிசனச்செறிவு

உலகிலேயே நமது தமிழீழத்தில் தான் 6000 மக்கள் சதுர அடி ஒன்றுக்கு என்னும் சனத்தொகை விகிதத்தில் செறிந்து வாழ்கின்றார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. எனவே தமிழ் இளைஞர்கள் தமிழீழமெங்கும் பரந்து வாழப்புறப்பட்டாலே நமக்கு மீட்சி ஏற்படும். எமது மக்கள் சனத்தொகை செறிவாக இருப்பதால் உடலுழைப்பைக் கொண்டு வாழவேண்டியவர்களாக உள்ளனர்.

### வேலைவங்கி கண்துடைப்பு

அரசு வேலைவங்கிப் படிவங்களை விநியோகிக்கத் தொடங்கியதும் கியூவில் மக்கள் எம். பி.க் களின் வீடுகளுக்கு படையெடுத்தார்கள். உண்மையில் இவ்வித வேலைவங்கிகள் வெறும் கண்துடைப்பு இவைகளின் மூலம் ஒருசில உத்தியோகங்களை மட்டும் வழங்கி வேலையில்லாப் பிரச்னையைத்தீர்க்கமுடியாது. அல்லது தமிழர் சிங்கப்பூர் மலேசியா என முன்னர் வேலை தேடிப்போனதுபோல் போயும் இப் பிரச்னையைத் தீர்க்க இயலாது. இங்கிலாந்தில் கூட நாளை தட்சர் கட்சி பொறுப்பு ஏற்றால் அங்கிருக்கும் தமிழர்களும் ஆசியாக்காரர்களுடன் மீளவும் இங்கு அனுப்பப்படலாம்.

### விவசாயமே தீர்வு

எனவே தமிழ் மக்கள் நிரந்தரமான பொருளாதார பலத்தைப்பெற இருக்கும். ஒரே தீர்வு விவசாயமும் தொழில் துறைகளுமே. ஆகவேதான் எமது விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பாக இருப்பவர்களும் இத்தொழிலாளி-விவசாயப் பெருமக்களே.

### மிளகாய்ச் செய்கை பாதிப்பு

சென்ற அரசாங்கமாயினும் ஓரளவு பொருளாதார சிந்தனையுடன் அரசைச் செலுத்தியது. ஆனால் இன்றைய அரசு எங்கே போகிறோம் எனத்தெரியாத நிலையில் பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுகிறது. இன்றைய அரசு வெங்காயம், மிளகாய்க்கு இறக்குமதி அனுமதி அளித்தது. இதனால்எமது மிளகாய் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டது. அதிலும் 79-ம் ஆண்டு இறுதியில் மோசமாகப் பாதிக்கப்படும். இதனை அரசுக்கு எடுத்துக் கூறி மிளகாய் இறக்குமதியைத் தடை செய்யும்படி வேண்டினோம். நமது விவசாயிகள் ஒரே பயிரையே தொடர்ச்சியாக பயிரிடுவதால் மண்ணின் சக்தியை அப்பயிர்கள் உறிஞ்சுவதால் மண்வளம் குன்றுகிறது.

இதனை ஈடுசெய்வதற்கு சுழற்சிப் பயிர்ச்செய்கையே மிகச் சிறந்தமாற்று நடவடிக்கை.

### மா இறக்குமதி

மேலும் அமெரிக்காவின் மாவை பி. எல். 480 திட்டத்திற்கு அமைய இலவசமாக பெறுவதினால் அரசு போதியளவு மாவை இறக்குமதி செய்கிறது. உலகிலேயே இந்த இலவசமாவைப் பெற்ற எந்த நாடும் தன்னிறைவு பெற்றது கிடையாது. ஏனெனில் இலவச உணவு மனிதரை சோம்பேறிகளாகமாற்றுவது தான்.

இது ஒருபுறமிருக்க திருமலையில் மா ஆலை என்னும் பெயரில் எமது தலையில் கருங்கல்லுப்போடுகிறார்கள். 27வீத கோதுமைச் சக்தி அதன் தவிட்டினிலேயே உள்ளது. ஆனால் திருமலையில் திறக்கப்பட இருக்கும் மா ஆலையிலே தவிட்டையும் குறுணலையும் ஏற்றுமதி செய்துவிட்டு சத்தற்ற அமெரிக்கன் மாவையே எமக்கு அளிக்கப்போகிறார்கள்.

முன்னர் எமது மக்கள் நெல்லுச் சோற்றுடன் குரக்கன் போன்ற உப உணவுகளையும் தம் பிரதானமான உணவாக பயன்படுத்திவந்தனர். ஆனால் இன்றோ நெல் சோற்றை மட்டுமே நம்பிவாழ்கிறார்கள்.

மாவும் அரிசியும் போதியளவு கிடைக்கச்செய்வோம் எனப் பதவிக்கு வந்த அரசு முதலில் மாவின் விலையை குறைத்தது, இன்று மீளவும் ஏற்றியது அரிசிக்கு நெல்லில் உத்தரவாதவிலையை குறைத்தது. ஆனால் உரம், பசளைகளின் விலையைக்கூட்டி மறைமுகமாக அரிசிவிலையைக்கூட்டுகிறது.

### ரூபாயின் பெறுமதி குறையும்

அதுமட்டுமல்லதைமாதத்திற்கிடையில் நிச்சயம் ரூபாயின் பெறுமதி ஆகக்குறைந்தது 25 வீதத்தாலாவதுகுறையும்பெற்றோலின் விலை ஏறியதும் நிச்சயம் இது நடக்கும். எனவே நாம் பாரிய பொருளாதாரத் திட்டத்துடன் செயற்பட்டாலே பொருளாதாரத்துறையில் நாம் சுயபலம்பெற்று விடுதலைப்பாதையில் மேலும் விரைந்து செல்லலாம். (கி)

---

# "1000 பேருக்கு வேலைவங்கி பத்திரம்; 900 பேர் எதிர்ப்பு"

## ஆவரங்கால் மாநாட்டில் சூசைதாசன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''வேலை வங்கி பத்திரத்தை வழங்கி இளைஞர்கள் எல்லோரையும், எங்களுக்கு எதிரியாக்கிவிட்டது இந்த அரசாங்கம். அரசு 1000 வேலை வங்கி பத்திரங்களை எமக்கு வழங்கியது. 10,000 இளைஞர்கள் விண்ணப்பித்தனர். 1000 பேருக்கு மட்டுமே பத்திரங்களை வழங்கினோம். இதனால் 9000 பேர் உடனடி எதிரிகளானார்கள். 1000 பேரிலும் 100 பேர் மட்டில்தான் வேலை கிடைக்கும். மற்றய 900 பேர் இதனால் எதிரிகளாவர். அந்த வேலைபெறும் நூறுபேர் கூட வேலை தந்த அரசுக்கு மாறாக இருக்கக்கூடாது என எங்களை எதிர்ப்பார்கள். இப்படி இளைஞர்கள் எல்லோரையும் எங்களுக்கு எதிரிகளாக்கி விட்டது இந்த அரசு.''

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அரங்கில் நடந்த தொழிலாளர் விவசாயிகள் மாநாட்டில் பேசிய மன்னார் எம். பி. திரு. பி. சூசைதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சூசைதாசன் மேலும் பேசுகையில்: 'தமிழ் ஈழம் வேண்டும்' என்று போராட்ட காலத்தில் கோஷமிட்ட இளைஞர்கள்,'வேலைப்போம்'வேண்டும்' என்று எம். பி.க்கள்வீடுகளில் கியூவில் நின்று கோஷமிடுகிறார்கள். அரசு திட்டமிட்டு, இளைஞரை மட்டம் தட்ட, இந்த வேலை வங்கிப் 'போமை' தயாரித்ததுஎன்றார்

''தமிழ்ப் பிரதேசத்தைக் காப்பாற்ற வேண்டும். வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் தமிழ்ஈழ எல்லையில் வந்து குடியேறவேண்டுமெனஅழைக்கின்றேன். மன்னார் பிரதேசத்தில் போதிய இடமுண்டு. அங்கு வாருங்கள். உங்களுக்குத் தேவையான வசதி செய்துதருகிறோம்.

பிரதேசத்தைக் காப்பாற்றுமல், கலாச்சாரம், பண்பு மொழியைக் காப்பாற்றமுடியாது. இதற்கு பல சான்றுகள் உண்டு என்றார்.

### அடிமையானதால் ஏற்பட்ட நிலை

சில பகுதிகளில் வாழும் தமிழர்கள் முற்றாகத் தமிழ் மொழியை மறந்துவிட்டார்கள். 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடையிலுள்ளவர்கள் சிங்களம், தமிழ் மொழியைப் பேசுகிறார்கள், 30 வயதிற்குட்பட்டவர்கள் சிங்களத்தை மட்டுமே பேசுகிறார்கள். அவர்கள் சிங்கள ஆட்சியினருக்கு அடிமைப் பட்டதனால்தான் இந்நிலை ஏற்பட்டது.

தமிழர்களுக்கென இந்நாட்டில் சொந்தமான பிரதேசம் இல்லையென்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவரும் குடியேறலாமென்றும் யாழ்ப்பாணத்தவர் காலியிலும், கண்டியிலுள்ளவர்கள் மட்டக்களப்பிலும், மன்னாரிலுள்ளவர்கள் மாத்தறையிலும் குடியேறலாமென்று ஜனாதிபதி கூறியிருந்தார். இன்றுள்ள நிலையில் மன்னாரிலுள்ளவர் மாத்தறையில் குடியேறமுடியுமா.?

4500 சிங்களக்குடும்பங்களை தமிழ்ஈழத்தில் திட்டமிட்டுக் குடியேற்ற அரசுதிட்டம்தீட்டி வருகிறது. இதை நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. எல்லைகளில் வந்து குடியேறுங்கள். மன்னார், வவுனியா திருமலைக்கு வந்து விவசாயம் செய்யுங்கள். நிலம் தருகிறோம். உதவி புரிகிறோமென்று திரு. சூசைதாசன் மேலும் பேசுகையில் கூறினார்.

### திரு. சம்பந்தன்

தமிழ் தொழிற்சங்க கூட்டணி செயலாளர் திரு. சம்பந்தன் கூறியதாவது: பலகாலமாக தமிழ்த்தொழிலாளர்கள் இடதுசாரி இயக்கங்களில் ஈடுபட்டிருந்தார்கள். இதனால் தமிழர் விடுதலைக்கு போராடமுடியாமல் போனது. சிங்களம் மட்டும் சட்டம் வந்தபின், மொழிவழி தொழிற்சங்கங்கள் உருவாகின. அதன்பின், தமிழ்த்தொழிலாளர்கள் இச்சங்கங்களை நாடினார்கள். தமிழ்தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தமிழ்இன விடுதலைக்கு போராடவேண்டும்.

### மகாவலித்திட்டம்

மகாவலித்திட்டத்தின் கீழ் 25,000 இளைஞர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது, வடக்கு கிழக்கைச்சேர்ந்த இளைஞர்களுக்கு எவ்வித வேலையும் வழங்கப்படவில்லை. மலையகத்தில் 2 லட்சம் இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கூட அத் திட்டத்தில் வேலை வழங்கப்படவில்லை.

மதுறுஓயா திட்டத்தில் விவசாயக்காணிகள் வழங்கப்படும்போது அவற்றை தமிழ் இளைஞர்கள் கைப்பற்றவேண்டும்.

கிராம அபிவிருத்திக்காக, குருநாகல் மாவட்டத்திற்கு 380 கோடியும், அம்பாந்தோட்டைக்கு 80 கோடியும், மாத்தறைக்கு 11 கோடியும், வெளிநாட்டு உதவியாக அரசுசெலவு செய்கிறது. வடக்கு, கிழக்கில் செய்யாவிடினும், மலைநாட்டில் கூட எதுவும் செய்யவில்லை.

வவுனியாவில் சீநோர் திட்டம் மூலம் 15 லட்சம் ரூபா செலவு செய்ய 500 ஏக்கர் காணி அரசிடம் கோரப்பட்டது. இதற்கு அரசு மறுத்துவிட்டது. ஆனால் அதே திட்டத்தை அம்பாந்தோட்டையில் ஆரம்பித்துள்ளது.

### மலையகத்தவர் துணிச்சல்

மலையகத்தில் உள்ள தமிழர்கள் துணிந்தவர்கள். எதற்கும் அஞ்சாதவர்கள். போராட்டத்தில் முன்னிற்பவர்கள். கலவரம் தொடர்பான விசாரணையில் துணிந்து சாட்சியமளித்தார்கள். மீண்டும் சிங்களவர் மத்தியில் வாழ்ந்துகொண்டே, கண்டியில் சாட்சியமளித்தார்கள். ஆனால் 250 மைல்வந்த யாழ்ப்பாணத் தமிழன் சாட்சியமளிக்கப் பயந்துவிட்டான். எத்தனையோ சம்பவங்களை நேரில் கண்ட தமிழ் அரச ஊழியர் சாட்சியமளிக்க முன்வரவில்லை.

மதுறுஓயாத் திட்டத்தின்கீழ் மட்டச்களப்பில் 45,000 சிங்களக்குடும்பங்களைக் குடியேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இந்த விவசாயத்திட்டத்தில் தமிழ் இளைஞர்கள் காணிபெறவேண்டும்; அதற்குவழி செய்யவேண்டும். இதைத் தடுக்காவிடில் கிழக்குமாகாணம் முற்றாகப் பறிபோய்விடும்'

### பட்டிருப்பு உறுப்பினர்

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் கூறியதாவது;'மதுறுஓயாத்திட்டத்தை நாம் அனுமதித்தால் இன்னும் 5 ஆண்டுகளில் கிழக்கு மாகாணம் சிங்களப்பிரதேசமாகிவிடும். அரசுதிட்டமிட்டு சிங்களக்குடியேற்றம் நடத்தி வருகின்றது. இளைஞர்கள் இதை பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது உடன்செயலில்இறங்க வேண்டும். விவசாயம் என்ற போர்வையில் சிங்களக்குடியேற்றம் நடக்கிறது.

திருமலை, மட்டக்களப்பில் யூ. என். பி. திட்டமிட்டு சிங்களக்குடியேற்றம் நடத்தி வருகிறது, எனது தொகுதியான பட்டிருப்பில்கூட ஒருபகுதி, அம்பாறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ்கொண்டுவர அரசு திட்டமிட்டு வருகின்றது.

மேடையில் தமிழ்ஈழம் கேட்டுக்கிடைக்காது. காலம் கடந்துவிட்டது. செயலில் இறங்குங்கள். போராட்டத்திற்குத் தயாராகுங்கள்.

எனதுமாவட்டத்தில் ஏராளமான நிலம் உண்டு. வடக்கிலுள்ள வாலிபரை அங்கு குடியேற்ற நான் தயார். கிழக்கில்லாமல் தமிழ்ஈழம் காணமுடியாது.

உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு கண்டுள்ளோம். தொடர்ந்து உணவு உற்பத்தியில் ஈடுபடுவோம். வடக்கு இளைஞர் கிழக்குநோக்கி வந்தால் தமிழ்ஈழம் தானாக மலரும்.

கல்லோயாத் திட்டத்தின் கீழ் 45,000 ஏக்கர் நிலத்தில் சிங்களவர்களைக் குடியேற்ற திட்டப்போடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண எல்லையில் பொலநறுவமாவட்டம் இருக்கிறது. அங்கு ஏற்கனவே குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் குடியேறி விவசாயம் செய்ய தயங்குகிறார்கள் அரசு 400 அல்லது 500 தமிழ் குடும்பங்களை மட்டும் அத்திட்டத்தின்கீழ்குடியேற்றிவிட்டு மிகுதியாக சிங்களவரை குடியேற்றும் இந்த அரசின் திட்டத்தை தமிழ் இளைஞர் முறியடிக்க வேண்டும்.

### எஸ். எம். செல்லச்சாமி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. செல்லச்சாமி கூறியதாவது; இந்நாட்டிற்கு மலைநாட்டுத் தொழிலாளிகளே அந்நிய செவாணியைத்தேடிக்கொடுத்தார்கள். அப்படிப்பட்டவர்கள் கடந்த கலவரத்தில் முறியடிக்கப்பட்டார்கள் அரசு தொழிலாளர் பிரச்னையை, வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்கமுடியாமல் திண்டாடுகிறது.

மிகப்பெரிய சக்தி தொழிலாளர்சக்தி. சர்வதேச அரங்கில் தொழிலாளர் முக்கிய இடம் பெற்றுள்ளனர் அரசு ஒருபக்கத்திலும் தொழிலாளர் மறுபக்கத்திலுமிருந்து நாட்டின் பிரச்னை மட்டுமென்று சர்வதேசப் பிரச்னையும் பேசக்கூடிய விதத்தில் தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்துள்ளது.

இ. தொ. க. மலையகத்தில் 35 வருடகாலமாக தொழிலாளரை உருவாக்கி பிரிட்டிஷாருக்கு எதிராக பல போராட்டங்களை நடத்தி இயக்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறோம். 48 தொழிலாளர் மலையகத்தில் துப்பாக்கி சூட்டுக்குப் பலியாகியிருக்கிறார்கள்.

1977ம் ஆண்டு கடந்த அரசு 10,000 ஏக்கர்தோட்டத்தைச் சுவீகரித்து 18,000 தொழிலாளரை வெளியேற்றி சிங்கள கிராமத்தவரை அங்கு குடியேற்ற முயற்சித்தது. இதனை நாம் பலமாக எதிர்த்தோம். மலையக இளைஞர் லட்சுமணன் முன்னின்று போராடினார். 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் போராடினோம். வெற்றிகிட்டியது. (க)

### விழுப்புரம் சாதிக்கலவரம்

# நிவாரணப் பணியில் எம். ஜி. ஆர். தீவிரம்

## பொலிசாருக்கு இடமாற்றம்

சென்னை, ஜூலை. 30

விழுப்புரத்தில் நடைபெற்ற சாதிக்கலவரங்களின் போது ஏற்பட்ட சேதங்களுக்கு விரைவானநிவாரணம் அளிப்பதற்குரிய நடவடிக்கைகளை தமிழகமுதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இலவச பண்டங்களைவழங்கவும் தமது முதலமைச்சர் நிதியிலிருந்துரொக்சப்பணத்தைக் கொடுத்துதவவும் அவர் முன்வந்துள்ளார்.

**பொலிசார் இடமாற்றம்**

விழுப்புரம் உதவிப்பொலிஸ் சுப்பிரின்டன்ட், பொலிஸ் இன்ஸ்பெக்டர், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், ரெவினியூஇன்ஸ்பெக்டர் ஆகியோரை தமிழக அரசு இடமாற்றம் செய்துள்ளது.

**அரசு பரிசிலனை**

சேதமடைந்த வீடுகளை அரசு செலவில் திருத்திக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**எம். ஜி. ஆர். மாநாடு கூட்டினர்**

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று உயர்மட்ட மாநாடு ஒன்றினை நடத்தி தமது நிவாரணநடவடிக்கைகள்பற்றி அறிவித்தார்.

இம்மாநாட்டில் தகவல் ஒலிபரப்புத்துறைஅமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன். ஹரிஜன நலத்துறை அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் முதலானோர் கலந்துகொண்டனர்.

**விசாரணைக் கமிஷன்**

இச்சாதிக்கலவரம் பற்றி விசாரணை நடத்தும்பொருட்டு தமிழக அரசு சதாசிவம் என்பவர் தலைமையில் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது.

மூன்றுமாத காலத்தில் இக் கமிஷன் தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கும்.

கலவரத்தில் 12 பேர் கொல்லப்பட்டனர். 63 ஹரிஜனர் வீடுகளும், 115 ஹரிஜனரல்லாதோர் வீடுகளும் கலவரத்தில் சேதமடைந்தன.

**தி. மு. க. குற்றச்சாட்டு**

இது இவ்வாறிருக்க, திராவிட முன்னேற்றக்கழகம் இக் கலவரம் பற்றி ஆராய விழுப்புரத்திற்கு மூவர் குழு ஒன்றை அனுப்பியிருந்தது. முன்னாள் மந்திரி திரு. சாதிக் பாட்சா, சட்டசபை உறுப்பினர்கள் சந்திரன், ஜெயபால், பாலன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றனர்.

அதிகாரிகளின் அசிரத்தையே கலவரம் கூடியதற்குக் காரணமென்று இக்குழு குற்றஞ்சாட்டியது

ஒரு ஹரிஜனப் பெண்ணை உயர்ஜாதிக்காரரர் ஒருவர் கற்பழித்ததனையடுத்து கலவரம் மூண்டதாகக் கூறப்பட்டது.

அனல் பொலிசார் இதனை மறுத்தனர். (உ)

# இந்திரா வெளிநாடுசெல்ல நீதிமன்றஅனுமதிவேண்டும்

## சென்னையில் ஸ்டேட்அமைச்சர் குண்டு

சென்னை, ஜூலை. 30

"முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்."

இவ்வாறு மத்தியஉள்துறை ஸ்டேட் அமைச்சர் திரு. சமரேந்திரகுண்டு சென்னையில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ள திருமதி காந்திக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தால் மட்டுமே "பாஸ் போர்ட்' வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (இ)

# இந்து நதி

## உடைப்பெடுக்கும் அபாயம்

### பாக். அரசு மக்களுக்கு எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாகப்பெய்துவரும்பெருமழையை அடுத்து இந்துநதி உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் இதனால் 60 லட்சம் மக்கள் பாதிப்புறலாமென்றும் பாகிஸ்தான் அரசு எச்சரித்துள்ளது.

இந்துநதி ஓரத்திலிருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இதுவரை 100 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது, (இ)

# தேசாய் - சரண்சிங் சந்தித்துப் பேசினர்

## வாசல்வரை வந்து வழியனுப்பினர் தேசாய்

புதுடில்லி, ஜூலை. 30

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும், முன்னாள் உள்துறைஅமைச்சர் திரு சரண்சிங்கும் நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்து தம்மிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் குறித்து பேச்சு நடத்தினர்.

பிரதமரின் இல்லத்தில் இரண்டாவது தடவையாக நடந்த இச்சந்திட்பு 75நிமிடங்கள் நீடித்ததாகவும் இப் பேச்சுவார்த்தையின் போது திருவாளர்கள் பிஜூ பட்நாயக், மதுலிமாயி ஆகியோரும் உடனிருந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்கள் முடிந்ததும் திரு. தேசாய் திரு. சரண்சிங்கை வழியனுப்ப வாசவல்வரை வந்ததாகவும், அப்போது பேச்சு வார்த்தை குறித்து கூறுவதற்கு எதுவுமில்லையென்று திரு. தேசாய் நிருபர்களிடம் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

**இன்றைய உற்சவம்**

வண்ணை சிவன் கோயிலில் தேவி மகோற்சவம் 4-ம் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா 9 மணிக்கு அம்மன் பூஜை ஆகி, மஞ்சத்தில் உள்வீதிவலம்வருதலும் மாலை திருவிழா 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆகி யானை வாகனத்தில் அம்மன் வெளி வீதிவலம்வருதலும் இரவு 9 மணிக்கு அர்த்தசாமப் பூஜையும் நடைபெறும்.

### விண்வெளியில் நடந்தனர்

மாஸ்கோ, ஜூலை. 30

விண்வெளியில் ஆய்வு நடத்திவரும் சோவியத் சோயுஸ் விண்வெளி ஆய்வு கூடத்திலிருந்த இரு வீரர்களும் நேற்று சுமார் 2மணி நேரம் விண்வெளியில் நடந்தனர். (இ)

### சர்ச்சைக்குரிய கடிதங்கள்...

புதுடில்லி, ஜூலை. 30

ஜனதா கட்சிக்குள் அண்மையில் தோன்றிய நெருக்கடி காலத்தில் முன்னாள் உள்துறை திரு. சரண்சிங்குக்கும் தமக்குமிடையே பரிமாறப்பட்ட சர்ச்சைக்குரிய கடிதங்களை எதிர்க்கட்சித் தலைவர்கள் பார்வையிட அனுமதிப்பதென்று இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தீர்மானித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர்கள் பார்வையிட்டாலும் இக்கடிதங்கள் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. (இ)


கமத்தொழில் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் கமக்காரர்களுக்கு இதோ!

ஒரே தாபனத்தில் திறமைமிக்க வாகனங்கள் மூன்று!

ஹொண்டா C 50 C 70 C 90



கமக்காரர்களின் அன்றன்று போக்குவரத்திற்கு இடைஞ்சல் இன்றி உதவுவன ஹொண்டா C50, C70, C90 மோட்டார் சைக்கிள்களே! இன்று கமக்காரர்களின் மத்தியில் பிரசித்தி பெற்றவை! குறுகிய-சிறிய பாதைகளில் மட்டுமல்ல, வயல் வரம்பினூடே ஓடக்கூடியவையும், நினைத்த இலக்கை அடையக்கூடியவையும், காலத்தையும் காசையும் மிகுதிப்படுத்திக் கொள்ளக்கூடியவையுமாகும்.

ஒருகலன் பெற்றோலுக்கு 200 மைல்களுக்குமேல் ஓடக்கூடியவை! போஸ்ட்ரக் என்ஜின் பொருத்தப்பட்டவை. நீண்டகாலத்திற்குப்பின் கிடைப்பவை! இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்களும் புதிய ஹொண்டா C50, C70, C90 மோட்டார் சைக்கிள்களில், ஒன்றை, இன்றே-உடனடியாகப் பெற்றுக்கொள்ள, கீழ்க்கண்ட தாபனங்களில் பணத்தைச் செலுத்தி, உங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளுங்கள் :-

விற்பனை முகவர்கள்:

- ரன்ஜித் இலக்ட்ரிக்கல்ஸ், 29, புத்தளம்வீதி, குருநாகலை.
- சென்ட்ரல் மோட்டர்ஸ், பதுளை
- கண்டி ஓட்டோசைக்கள்ஸ் வேர்க்ஸ், கண்டி.
- குரே சகோதரர்கள், ஹிக்குரக்கொடை.

ஸ்டெப்பட் மோட்டார் கம்பனி லிமிட்டெட்

"ஹொண்டா ஹவுஸ்" (அட்லஸ் ஹோல் கல்லூரி அருகே)

718/7, மருதானைவீதி, கொழும்பு-10.

தொலைபேசி: 94362.

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Last Few Days
Peter Fonda.
DIAMOND MERCENARIES

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
**உறவுசொல்லஒருவன்**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
**நினைத்ததை முடிப்பவன்**
(புதிய-பிரதி கலர்)

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 p m only
The Story of a Love that Defied Death
Gamini Fonseka
in
**'SEETHA DEVI'**
Eastman Color (English)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**படித்தால் மட்டும் போதுமா**
(புதியபிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
**நானும் மனிதன்தான்**

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - L. விஜயலட்சுமி
**வல்லவன் ஒருவன்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் ரசிகர்கள் கூட்டம்!
பார்த்துப் பரவசமடைந்தவர்கள் மீண்டும் பார்க்கும் நோட்டம்!
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடித்த
தேன் சுவையூட்டும் தீந்தமிழ் கீதம் மலிந்த
**தெய்வம் தந்த வீடு**
(சினிமாஸ் கோப்)


இரு விமர்சனங்கள்

# 'தெய்வம் தந்தவீடு'

தெய்வந்தந்தவீடு இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் சினிமாஸ்கோப் படம். இப்படத்தைப்பற்றிய கொழும்புப் பத்திரிகைகள் விமர்சனங்கள் எழுதி விட்டன, யாழ்ப்பாணத்தில்சென்றவாரம்தான்திரையிடப்பட்ட இப்படத்தைப்பற்றி இரு வாசகநேயர்கள் எழுதிய விமர்சனங்களை இங்கு தருகிறோம்.

## ஒருசிறந்த முயற்சி

'தெய்வம்தந்தவீடு' இப்பொழுதெல்லாம் காரணமில்லாமல் பெயர்வைப்பது சகஜமாகிவிட்டது) ஒருசிறந்தபடம் என்று கூறவைக்காவிட்டாலும், ஒரு சிறந்த முயற்சி என்று கூறவைக்கின்றது.

### நடிப்பு

கதாநாயகனின் பெயரை டைட்டிலில் முதலில் காட்டாமல் சகநடிகர்களின் பெயர்களைப்போட்டு, இவர்களுடன் ரகுநாதன் எனப் போட்டிருப்பது, ஒரு தன்னடக்கமுள்ள அர்த்தமாகும். ரகுநாதனிடம் திறமை இருப்பதும், ஆர்வம் இருப்பதும் தெரிகின்றது. ஆனல் அவரது தோற்றமே அவருக்குக் கை கொடுக்கவில்லை. நாதஸ்வரம் வாசிக்கும்போது சிறப்பாக பாவனை செய்கின்றார்.

சாதாரணமாக நடிப்பில் குமுதினியைவிட சந்திரகலா பரவாயில்லை. ஆனல் நடனமாடும்போது குமுதினி ஜொலிக்கின்றாரே...! நடனமாடும்போது காட்டும் முகபாவங்களையும் தலையசைவுகளையும் சாதாரணநடிப்பிலும் ஏன் காட்டுகின்றாரோதெரியவில்லை இதுவரை வந்த ஈழத்துநடிகைகளுள் குமுதினியே அழகாகவும் இளமையாகவும் இருக்கின்றார். ஆனல் அவற்றைத் தவிர நடிப்பு முக்கியமானது என்பதை உணரவேண்டும். சந்திரகலாவும், கப்புலக்ஷ்மி காசிநாதனும் சோகக்காட்சிகளில் நன்றாக எடுபடுகின்றனர்.

மனதில் நிறைவைக் கொடுப்பவர்கள் ஜவாகரும் தனரட்னமும் தான். அடுத்தபடியாக டீன்குமாரைக் குறிப்பிடலாம். பல்கலைமணி சுதுமலை தம்பிராசாவுக்கு ஒரு சிறிய பாத்திரம் கொடுத்து வேஸ்ட் பண்ணியிருக்கிறார்கள். தவில் வித்துவானகவரும் கண்ணன் நன்றாக நடிக்கின்றார். ஆனல்தவில் வாசிக்கும்போது ஓவர் அக்ட்டிங்.

ஜெயதேவியைப்பற்றி...சே...சே...வேண்டாம். அவருடன் வரும் நெய்னார் முன்னர் நாடகங்களில் நல்லபாத்திரங்களில் நடித்ததாக ஞாபகம். 'காத்திருப்பேன் உனக்காக'வில் புதுமையான நடிப்பால் கவர்ந்த விஸ்வநாதராஜாவுக்கு ஏதாவது நல்ல பாத்திரம் கொடுக்கக்கூடாதா... கொடுத்த ஒட்டைப் பாத்திரத்திலும்அவர் ஓவர்அக்ட்டிங்கை காட்டவேண்டுமா...

### கலை நுணுக்கங்கள்

ஆரம்பத்தில் ரகுநாதனும் குமுதினியும் பேசுவது-டீன் குமாரும் சந்திரகலாவும் பேசுவது-வில்லுப்பாட்டு-கதாப்பிரசங்கம் ஆகியவற்றை மாற்றிப் போடும்போது டைரக்டரும் எடிட்டரும் கொடிகட்டிப் பறக்கின்றார்கள். தமிழ்ப்படங்களில் இதுவரை வராத புதிய உத்தி சபாஷ். ஆனல் அந்த சீனுக்கு பின் டைரெக்டரின் முத்திரை வேறெங்கும் விழவில்லையே...

முத்துச்சம்பா ...என்ற பாட்டையும் விளையாட்டுத்தனமான மாட்டுவண்டிச் சண்டையையும், அதற்கான குழந்தைத்தனமான காரணத்தையும் தேவையில்லாமல் படத்தில் புகுத்தியிருக்கிறார்கள். ரேப்பிங் சீனும் அப்படியே. தேவையில்லாத இடத்தில் நடிகர்களோ சம்பவங்களோ இல்லாமல் வெறும் கோவில்களை மட்டும் கொண்ட 'நாதம் கேட்குதடி' என்ற பாடற்காட்சியை ஒளிப்பதிவாளரும் எடிட்டரும் தான் காப்பாற்றியிருக்கின்றார்கள்.

ரகுநாதனின் கதையில் (இலேசாக 'தில்லானா மோகனம்பாளின் வாடை வீசுகின்றது) எதுவித புதுமையும் இல்லாவிடினும் வசனங்கள் கேட்கக்கூடியனவாக இருக்கின்றன. பாடல்கள் பரவாயில்லை இசையும் சோடை போகவில்லை. பத்மநாதனின் நாதஸ்வரம் மனதை நிறைய வைக்கின்றது. 'தென்றலும் புயலும்' படத்தில் கண்ட ஒளிப்பதிவாளர் கயூரை இதில் காண முடியவில்லை

கலையரசு சொர்ணலிங்கமும் ரகுநாதனும் பேசும் காட்சி ஏன் அவ்வளவு கடும் வெளிச்சமாக இருந்து அவர்களையே மறைக்கின்றது? ஒளிப்பதிவில் நடந்த தவறு? லபோரட்டரியில் நடந்த தவறு? கடைசிக்காட்சியில் டீன்குமார் ஏன் ரகுநாதனை சுடுகின்றார்? ஏரு குண்டில் எப்படி ரகுநாதனும் குமுதினியும் இறக்கின்றனர்? ஒன்றும் புரியவில்லையே...படம் முடிந்தவுடன் இரண்டு குத்துவிளக்குகளைக் காட்டுவது ரசிக்கக்கூடிய புதுமை.

சந்திரகலா பாடும் மனமேடையில் என்ற பாடல் காட்சியை இன்னும் நன்றாக எடுத்திருக்கலாம் குமுதினியும் ரகுநாதனும் வரும் ''கொஞ்சிக் கொஞ்சிக்குயில்'' என்ற பாடலில் நன்றாக ரசிக்கக்கூடியவாறு இயக்கி இருக்கின்றார்கள். ரகுநாதன் நினைப்பதாகவும், குமுதினி உண்மையிலேயே பாடி, ஆடுவதாகவும் வரும் இரு காட்சிகளையும் இணைத்திருப்பது டைரக்டருக்கு சபாஷ் போடவைக்கின்றது.

தியேட்டரில் (சாந்தி-யாழ்ப்பாணம்) ஏன் ஒவ்வொருவரது முகங்களும் உடல்களும் நீளம் மாகத் தெரிகின்றது? லென்ஸையோ, ஸ்கிரீனையோ மாற்றி படத்தை சாதாரண நீளமாக காட்டுங்கள் அதுவே போதும்,

இறுதியில் டைரக்டருக்கு ஒரு வார்த்தை ''நடிக நடிகையர் தேர்வில் நீங்கள் தவறிவிட்டீர்கள்''

--- உதயவாணன்

# கலையம்சம் நிறைந்த தெய்வம் தந்தவீடு

ஈழத்திலே தயாரிக்கப்பட்ட முதலாவது சினிமாஸ்கோப் தமிழ்ப்படம் 'தெய்வம் தந்த வீடு' ஏன், உலகிலேயே முதலாவதாக தயாரிக்கப்பட்ட வெள்ளை கறுப்புநிற தமிழ் சினிமாஸ்கோப் படம் என்றும் கூறலாம். இந்தப் படம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சாந்தி தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

அற்புதமானநாதஸ்வரக்கலைஞன்வேணுகோபால்ரகுநாதன் அவன் ஆடலழகி ஜானகியைக் (குமுதினி) கண்டு காதலிக்கிறான். அவள்வேணுகோபாலின் கலையைக் காதலிக்கிறாளே யொழிய, அவனைக் காதலிக்கவில்லை. வேணுகோபால் இந்த ஏமாற்றத்தால் மதுவுக்கு அடிமையாகிறான். நாதஸ்வரத்தைத் தொடுவதையே நிறுத்திவிடுகிறான். பலரது முயற்சியும் பயனளிக்கவில்லை. ஜானகியின் முயற்சியால் நான்கு வருடங்களின் பின்னர் அவள்மீண்டும்நாதஸ்வரத்தைஎடுக்கிறான் அவள் ஆட இவன் வாசிக்கிறான். ஆனல் விதி விளையாடுகிறது...

கதையொன்றும் புதுமையானதல்ல. ஆனல் ஒரு கலைஞன் குறிப்பிட்ட ஒருசில உணர்ச்சிகளுக்கும், பழக்கங்களுக்கும் அடிமையாகும்போது எவ்வாறு சீரழிகிறான் என்பதனையே இக்கதை கூறுகிறதெனலாம்.

கதாநாயகனாகவரும் ரகுநாதன் நல்ல நடிகர் என்பது தெரிகிறது. அவர் இறுதியில் தில்லானா வாசிக்கும்போது உண்மைக்கலைஞன் தான் என்பதை நிரூபித்துவிட்டார். ஒரு கலைப் பாரம்பரியத்தில் ஊறிய முத்திரை அவரிடம் வெளிப்படுகிறதெனலாம். கதாநாயகி குமுதினி, திரைக்குப் புதியவர். ஆனல் கலைக்குப் புதியவரல்லர். இவரிடம் நல்ல திறமையிருக்கிறது என்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனல் இவரை டைரக்ரர் சரியாகப்பயன்படுத்தவில்லையென்றே கூறவேண்டும். படப்பிடிப்பாளரும் இவருக்கேற்ற கோணத்தில் வைத்துப் படம்பிடிக்கத் தவறிவிட்டார். ரகுநாதனுக்கு அபாரமாக அமைந்தஒப்பனை, குமுதினிக்கு அமையவில்லை. இது ஒப்பனைக் கலைஞரின் தவறு. இதனல் குமுதினியின் முழுமையான ஆற்றலைத் திரையில் காணமுடியவில்லை.

இப்படத்தில் சபாஷ"க்குரிய சிறந்த நடிகை சுப்புலட்சுமி காசிநாதன் என்பதை மறுக்க முடியாது. சுப்புலட்சுமியின் மெருகேறியநடிப்பினுல் அவருடன் இணைந்து நடித்து சந்திரகலா வீழ்ச்சியடைந்த விட்டார். சந்திரகலாவின்நடிப்பில் முன்னைய படங்களைவிட எவ்வித முன்னேற்றமும் இருக்கவில்லை. பல படங்களிலும் நடித்து அனுபவம் பெற்ற நடிகர் எனக் கருதப்படும் ஜவாகர் ஏன்தான் ஒரேபாணியில் நடிக்கிறாரோ தெரியவில்லை. அவருடைய 'ஸ்ரொக்' தீர்ந்துவிட்டது. அவரால் புதிதாக ஒன்றும் செய்ய முடியாதோ என எண்ணத்தோன்றுகிறது. அவர் தமது அந்தப் பயங்கரச் சிரிப்பை இனிமேல் நிறுத்துவது நல்லது. தமது உச்சரிப்பையும் திருத்துவது நல்லது. டீன்குமார் நன்றாக நடித்துள்ளார். ஆயினும் அவரது நடிப்பில் தென்னிந்திய நடிகர்களது சாயல் இருக்கிறது. இதைத் தவிர்த்தால் அவருக்கு நல்லதோர் எதிர்காலமுண்டு. குமரப்பாவாக வரும் பிரான்சிஸ், தவில்வித்துவானக வரும் கண்ணன் நட்டுவனாகவரும் காந்தன் ஆகியோர் அற்புதமாகநடித்தனர். சிறந்த ஹாஸ்ய நடிகரான விஸ்வநாதராஜா, நன்றாகச் செய்தார். ஆனல் அவரது கனமற்ற பாத்திர அமைப்பு அவருக்குப் பாதகமாகவே அமைந்துவிட்டதெனலாம்.

இன்றும் எமது காதில் ஒலிப்பது 'நாதம்கேட்குதடி' என்ற பாடல், இதனைப் பாடிய கிருஷ்ணமூர்த்திஈடிணையற்றகலைஞர் என்பதை ஒரிரு கணம் தோன்றினும் நிரூபித்துவிட்டார். இவரைப்போல தமிழ்த்திரையுலகில் ஈழத்தில் பாடியோர் இல்லை. இவரை தமிழ்த் திரை உலகம் கட்டாயம் இனிமேல் பயன்படுத்தும் என எதிர்பார்க்கலாம். இசையமைப்பு மிகநன்று. ரொக்சாமி, கண்ணன், நேசம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். பாடல்கள் அனைத்துமேநன்றாக உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக பத்மநாதன் கோஷ்டியினரின் நாதஸ்வர கானம் அருமையாக உள்ளது மட்டுமன்றிப் படத்தின் உயிராகவும் அமைந்துள்ளது.

இந்தப்படத்தில் தேவையற்ற சில காட்சிகளும் உள்ளன. அல்லது நன்றாக இணைக்கப்படவில்லை. ஒன்று சண்டைக் காட்சி. அடுத்தது நாட்டுக்கூத்து. வில்லுப்பாட்டையும் கூறலாம். சோக்கல்லோ சண்முகத்தின் கதாப்பிரசங்கம் நன்றாக அமைந்ததுபோல் ஏனையவை அமையாததற்கு எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்துக்காட்டியமை காரணமாகலாம்.

நாட்டுக்கூத்து என்றால் கட்டாயம் கூத்து (ஆட்டம்) இருக்கவேண்டும். இது கேலிக் கூத்தாக அமைந்துவிட்டது. ஒரு கல்வெட்டு, சிந்து என்பனவற்றுடன் கூத்தும் அமைந்திருந்தால் நாட்டுக்கூத்து எடுபட்டிருக்கும்.

எல்லாக் கலைகளையும் ஒன்றுக்காட்ட விரும்பிய தயாரிப்பாளரின் எண்ணம் வரவேற்கத்தக்கது. ஆனல் அதை எப்படி இரசிகர்களுக்கு அளிப்பது என்பதில்தான் தவறு செய்துவிட்டார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# "தமிழ் ஈழம் திருமலையில்தான் வெடிக்கும்!"

## அரசியல்மாநாட்டில் திருமலை இளைஞர் குரல்

(ஆவரங்கால்)

"தக்க தருணத்தில் தமிழ் தேசிய மன்றம் அமைத்து, தமிழ்மக்களுக்கென ஒரு அரசியலமைப்பை வகுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, மத்திய செயற்குழுவைப் பணிக்கிறது" என்ற தீர்மானம், அமரர் தந்தைசெல்வநாயகம் அரங்கில் நேற்றுக் காலை நடந்த அரசியல் மாநாட்டில் பெரும்பாலான மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இத்தீர்மானத்திற்கு எதிராக மூவர் மட்டும் வாக்களித்தனர்.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு அரசியல் மாநாடு ஆரம்பமானது.

விஷயாலோசனைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் நிறைவேறிய அரசியல் தீர்மானத்தைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மாநாட்டில் சமர்ப்பித்துப் பேசினார்.

### தமிழ் மண்ணைக் காப்பாற்ற......

"தமிழ் மண்ணின் எல்லைகளில் இளைஞர்களைக் குடியேற்றி, தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்கும், அகதிகளாக வந்துசேரும் தமிழர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும், இலங்கையிலும், உலகின் மற்றைய நாடுகளிலும் வாழும் தமிழர்கள், தங்கள் வருமானத்தில் ஒரு வீதம் வழங்கவேண்டும்" என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

தமிழ் ஈழ எல்லைகளைப் பாதுகாப்பதற்கு அகதிகளைக் குடியேற்றி, தாயகத்தைக் காக்க, தொண்டர்களாக ஆயிரக்கணக்கில் இளைஞர்களையும் மகளிர்களையும் சேருமாறு கோருவதென்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை திருக்கோணமலை எம். பி. திரு. சம்பந்தன் வழிமொழிந்து பேசினார்.

### "ஒரு குறிப்பிட்ட திகதி வேண்டும்"

இத்தீர்மானத்திற்கு தக்க தருணம் என்பதற்கு பதிலாக ஒரு தேதி குறிப்பிடப்பட வேண்டுமென்றும் அது 79 பெப்ரவரி 4ம் தேதியாக இருக்க வேண்டுமென்றும் ஒரு பேராளரினால் திருத்தம் கொண்டுவரப்பட்டபோது, தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் திருத்தம் எதுவும் கொண்டுவரக்கூடாதென்றார். விஷயாலோசனைக் கூட்டத்தில், கிளைகள் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் விரும்பியிருந்தால் திருத்தம் கொண்டுவந்திருக்கலாமென்றும் இங்கு திருத்தம்கொண்டுவரக்கூடாதென்றும் திரு. சிவசிதம்பரம் கூறினார்.

சுதுமலையைச் சேர்ந்த இராச மனோகரன் திருத்தம் கொண்டுவந்து பேசியதாவது: "ஒரு தேதி சுட்டிக்காட்டப்படவேண்டியது அவசியம். என்றை அமைக்கமுடியாது போனால், தவிர்க்கமுடியாத காரணத்தினால் பின்போடுவதாக கூறினால் மன்னிக்கலாம். தக்க நேரம் என்பது பிற்பாடு பாவிக்கவேண்டியசொல். தலைவர் திருத்தம் கொண்டுவர முடியாதென்று கூறுகிறார். வரையறுத்து குறிப்பிட்ட நேரம் கூறப்படவேண்டும்"

அளவெட்டியைச் சேர்ந்த இறைகுமாரன் பேசுகையில், "திருத்தம் கொண்டுவராவிடில் ஏன் இங்கு நாங்கள் கூடியிருக்க வேண்டும். தமிழ் ஈழ உற்பத்தியான கைத்தறி உடைகளை பாவிக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டும். திரு. அமிர்தலிங்கம் பிறந்தநாளையொட்டி ஒரு வாரம் கைத்தறிகளை விற்பனை செய்யலாம்.

### "தாயகம் வேண்டும்"

"நாம் பிரதேசத்தைக்குறிப்பிட்டுக் காட்டாமல் தாயகம் வேண்டும் என்று கேட்க வேண்டும் தாயகம் நயினாதீவாக இருந்தாலும்சரி, நெடுந்தீவாகவும் இருந்தாலும் சரி, அதனை முதலில் நாம் பெறவேண்டும். அப்படி தாயகத்திற்கு போராடினால் சிங்கள குடியேற்றம் என்று கூறி எங்களை ஏமாற்ற முடியாது"

திரு. எம். சிவசிதம்பரம் இக்கட்டத்தில் எழுந்து பொதுச்சபை உறுப்பினர்கள் நேற்று நடந்த விஷயாலோசனைக் கூட்டத்தில் திருத்தம் கொண்டுவந்திருக்க வேண்டுமென்றும், அவர்கள் இங்கு வந்து பேசுவது சரியல்லவென்றும் கூறினார்.

கைத்தறி ஆடையற்றி மற்றொரு தீர்மானம் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

### "திருமலையில்தான் வெடிக்கும்"

திருமலையை சேர்ந்த ஈழத்து நாதன் கூறியதாவது: "தேசிய மன்றத்திற்கு ஒரு தேதி குறிப்பிடவேண்டுமென்றும் தாயகத்திற்கு போராட வேண்டும் என்றும் இங்கு கூறினார்கள். கிழக்கு மாகாணத்தின் திருமலையை இழந்த பின் ஒரு தமிழ் ஈழம் அமைக்கப்பட்டு பயனில்லை. திருமலை தான் நீண்டகால போராட்டகளமாக இருந்து வந்துள்ளது. தமிழ் ஈழம் வெடிக்குமானால் அது திருமலையில்தான் வெடிக்கும். தமிழ்மண் காப்பாற்றப்படும் போதுதான் தமிழ் தேசிய மன்றம் அமைக்கும் காலக்கெடுவாக இருக்கும். இளைஞர் கையில்தான் அது இருக்கிறது. வடக்கிலுள்ள வாலிபர்கள் எவ்வளவு கூடிய சீக்கிரம் வந்து திருமலையில் குடியேறுகிறார்களோ அவ்வளவு சீக்கிரத்தில், மன்றம் அமையும்.

### 'கிழக்கில் வந்து குடியேறுங்கள்'

"'மட்டுநகர், திருக்கோணமலை, மன்னார், வவுனியாவை விட்டு, நீங்கள் தமிழ் ஈழம் அமைக்கமுடியாது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 7 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் 8 லட்சம் தமிழர் வாழ்கிறார்கள். ஆதலால் கிழக்கை விட்டுத் தமிழ் ஈழம் அமைக்கமுடியாது. வடபகுதி வாலிப நண்பர்கள் கிழக்கில் வந்து குடியேறி தமிழ்மண்ணைக் காப்பாற்றுங்கள்

திருகோணமலையில் 61 ஆயிரம் தமிழரும், 55 ஆயிரம் சிங்களவரும் இப்பொழுது வாழ்கிறார்கள். நாம் நெருக்கடியின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பயங்கரமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் ஏதோ பயத்தினால் தான் தமிழ் தேசிய மன்றம் அமைக்கத் தேதி குறிப்பிடவேண்டாம் எனக் கூறுவதாக நினைக்காதீர்கள். தந்தையின் அஸ்தியை திருக்கோணமலைக்குக் கொண்டுவந்தபோது சிங்களவர்கள் எங்களுக்கு குண்டடித்தார்கள் அப்படியான சூழ்நிலை அங்கு. சொந்தக் காணியைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கின்றோம்.

### தீர்ப்பளித்தும்

சிங்களவர் கடை வைத்து; அது சட்டவிரோதமென நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மாநகரசபை ஆணையாளர் அக்கடைகளை இடிக்கும்படி உத்தரவிட்டார். உடனே பிரதமர் தலையிட்டு, இடிப்பதை நிறுத்துங்கள் என அறிவித்தார். ஆனால், தமிழ்மக்கள் சட்டவரம்புக்குட்பட்டு நடந்தாலும் கஷ்டமாக இருக்கின்றது.

### 'காணி தருகிறோம் குடியேறுங்கள்'

'அரசாங்கம் திட்டமிட்டு நாளைக்கு யாழ்ப்பாணத்தில், உங்கள் சொந்தக் காணிக்குள் சிங்களவரை குடியேற்றினால் உங்களால் என்ன செய்ய முடியும்? எப்படித் தாயகம் அமைக்கப் போகிறீர்கள்? ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் தருகிறோம் வந்து குடியேறுங்கள். அதன்பின் தேசிய மன்றம் அமைப்போம்"

(மிகுதி நாளை வெளிவரும்)

---

## தடையை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாம், தமிழ் ஈழம் வேண்டும், தாமதம் வேண்டாம்" எனக் கோஷமிட்டனர். எங்கும் ஒரே பரபரப்பாக இருந்தது.

### தூதரக அதிகாரி கவனித்தார்

மேடையின் வலதுபக்கத்தில் பெண்கள் பகுதிக்கு முன்னால் அமெரிக்கத் தூதராலயச் செயலாளர் திரு. டிபோல் நின்று நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தார்.

மேடைக்கு ஏறிச் செல்வதற்கு முன்பக்கத்தில் ஏணிப்படி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஊர்வலத்தில் வந்த இளைஞர்களில் இருவர் ஏணியில் ஏறி, மேடையிலிருந்த 'மைக்'கைப் பிடித்தபடி மேடையில் ஏற முயற்சித்தனர். அப்பொழுது தொண்டர்கள் சிலர் அந்த ஏணியை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டனர். அதனால் அவர்கள் அவ்விடத்தில் நின்று பலத்த ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தனர்.

### அமிரும், சிவாவும் மேடையில

இதேசமயம் மேடையில் தோன்றிய கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும் "அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள்" எனக் கூறினார்கள். இளைஞர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். "உடனடியாகத் தேசிய மன்றம் அமையுங்கள்" எனக் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். திரு. அமிர்தலிங்கம், "உங்களால் கத்தத்தான் முடியும்; நல்லாய்க் கத்திவிட்டுப் போங்கள்" என்றதும், ஒலிபெருக்கியில் தேசிய கீதம் பாடப்படுமென அறிவித்ததும் மகளிர்கள் தேசியகீதம் பாட ஆரம்பித்ததும் ஊர்வலத்தில் வந்த இளைஞர்கள், சிறிது நேரம் அவ்விடத்தில் இருந்த பின் மீண்டும் எழுந்து 'தமிழ் ஈழம் அமைப்போம்' எனக் கோஷமிட்டபோது "தொண்டர்கள் என்ன செய்கிறார்கள்?" என்றுகேட்டார். பின் தொண்டர்கள் சிலர் வந்து அமைதியாக போகுமாறு கூறி அவர்களை அழைத்துச் சென்றனர். அவர்கள் சென்று கொண்டிருந்தபோது மாநாட்டு பந்தலுக்கு சமீபத்தில் வந்த சில இளைஞர்கள் அவர்களுடன் பலத்த வாக்குவாதம் செய்தனர் 'மேடைக்கு ஏன் சென்றீர்கள்? என இளைஞர் ஒருவர் கேட்டதைத் தொடர்ந்து வாக்குவாதம் நடந்தது. பொலிஸ் தடையை மீறி ஊர்வலம் நடத்திய எங்களை இப்படியா கேட்கிறீர்கள், என்று ஊர்வலத்தில் வந்த இளைஞர்கள் தெரிவித்தனர். இதனால் அவ்விடத்தில் பதட்டநிலையேற்பட்டது. பின் அங்கு வந்த சில இளைஞர்கள் அவர்களை அமைதியாகப் போகுமாறு அன்புடன் கேட்டு அவர்கள் கலைந்துசென்றனர். (க)

---

## வடக்கின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் விவசாய மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

நமது தமிழ் மண்ணில் புரதம் நிறைய இருக்கிறது என்று கூறிய திரு. துரைரத்தினம் நமது மண்ணில் காளான்களைப் பயிரிட்டு அதனை இறைச்சி, மீனுக்குப் பதிலாக பயன்படுத்தி புரதச் சத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று விளக்கிக் கூறினார். எமது விவசாயம் விஞ்ஞான மயமாக்கப்படவேண்டும், எமது கடல் வளம் நவீனப்படுத்தப்படல் வேண்டுமென்றும் அவர் கூறினார்.

---

## கலையம்சம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலியமைப்பு, ஒளியமைப்பு, எடிட்டிங் எல்லாமே நன்றாக உள்ளன.

சிறந்த கலையம்சம் பொருந்திய ஒரு திரைப்படத்தை எம்மாலும் தயாரிக்க முடியும் என்பதற்கு 'தெய்வம் தந்த வீடு' ஓர் எடுத்துக்காட்டாகும்.

தேவையற்ற சண்டைக்காட்சி, சோப் போடும் விரசமான குளியல் காட்சி, கற்பழிக்க முயற்சிக்கும் காட்சி ஆகியவற்றை நீக்கிப்பார்க்கும் போது இது ஒரு சிறந்த படம் என்பதில் ஐயமேயில்லை.

- காரை சுந்தரம்பிள்ளை

---


## மரண அறிவித்தல்

### பொ. செல்வரத்தினம்

தெல்லிப்பழை பொன்னையா செல்வரத்தினம் காலமானார். இவர், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி இளைப்பாறிய லிகிதரும், காலஞ்சென்ற கனகசபை பொன்னையாவின் மூத்த புதல்வனும், திருமதி தவமணி வேலுப்பிள்ளை, திரு. சோமசுந்தரம் (மலேசியா), திரு. கண்ணப்பர், திருமதி பரமேஸ்வரி செல்லையா, திருமதி மனோன்மணி பொன்னையா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். அவருடைய பூதவுடல் 31-7-78 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு, தெல்லிப்பழை பிரதான வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தெல்லிப்பழை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 9928

## மரண அறிவித்தல்

### சிவபாக்கியம் தியாகராசா

மானிப்பாய் திருமதி சிவபாக்கியம் தியாகராசா காலமாகிவிட்டார். இவர் நா. தியாகராசா (ஓய்வு பெற்ற P. W. D. பொறியியலாளர்) அன்பு மனைவியும், திருமதி நவலஷ்சுமி நடராசா, சி. இராஜேந்திரம் (இராஜன் இரும்புத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்) திருமதி யோகேஸ்வரி நமசிவாயம், N. S. தம்பிராஜா (S. M. யாழ்ப்பாணம்) சி. சிவலோகசுந்தரம் (மாவட்ட தபால்கந்தோர் பரிசோதகர், கிளிநொச்சி) சி பத்மநாதன் (S.V.W. யாழ்ப்பாணம்) ஆகியவர்களின் சகோதரியும், திருமதி A. K. அப்பாக்குட்டி, திருமதி P. துரைராஜா, திருமதி சுகுண இராஜேந்திரம், திருமதி தவமலர் தம்பிராஜா, திருமதி கமலாதேவி சிவலோகசுந்தரம், திருமதி புஸ்பம் பத்மநாதன் ஆகியவர்களின் மைத்துணியும், திருமதி பத்மலீலா கருணரட்னராஜா, சி. சபலானந்தன் (HEM GEMS LTD) ஆகியவர்களின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (31-7-78) மாலை 4 மணிக்கு 'நில்சந்தா' இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 9927

## யாழ்ப்பாணம் கிறித்தவ ஐக்கியம் எழுப்புதற் கூட்டங்கள்

**ஆடி 31, ஆவணி 1, 2.**

திறிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்.

பேச்சாளர்கள்:

கலாநிதி யோண் T. சிமண்ட்ஸ்

அருள்பெரும் திரு. சாம் D. கொசிங்ரன்

பி. ப. 5-00 மணி

9929


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.